20 காசு

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

27.3.69

கேள்வி ? பதில்

1. அண்ணியார் அவர்கள் மேலவை உறுப்பினர் பதவியை ஏற்றுக் கொண்டிருப்பது பற்றி காங்கிரஸ்ஏடொன்று கீழ்த்தரமாக விமர்ச்சித்திருப்பது தெரியுமா?

காங்கிரசுக் கட்சியிடம் - அந்தக் கட்சிக்காரர்கள் நடத்தும் ஏடுகள்—இதழ்கள் இவைகளிடம் போய் உயர்ந்த தரத்தை எதிர்ப் பார்க்கிறீர்களே! நடக்குமா?

2. 'காஞ்சி' இதழில் மீண்டும் பேரறிஞர் அண்ணு அவர்களது மடல்களேயும், கதைகளேயும் மறு பதிப்பாக வெளியிடுவது ஏன்?

'காஞ்சி'யையும், அதன் நிறுவனத்தையும் பொறுத்தமட்டில் பேரறிஞர் அவர்கள் மறைந்துவிட்டார்கள் என்ற நிலேயை ஒப்ப முடியவில்லே. பேரறிஞர் தம் பழைய - அச்சாகாத பல புதிய கட்டுரைகளேப் படிக்கும்போது அந்த உணர்வையே 'காஞ்சி' அடைகிறது. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற முதுரையை செயல்படுத்திப் பார்க்கிறது!

3. 'காஞ்சி'யின் பக்கங்களை அதிகப்படுத்தி மேலும் சிறப்புடைய தாக்கக் கூடாதா?

பேரறிஞர் தம் மடல்களேயும், கதைகளேயும் மீண்டும் அது ஏந்திவரும் சிறப்பொன்றே போதுமே! எனினும் கொஞ்சம் பொறுத்திருங்கள்! ஆசை நிறைவேறும்.

4. புதுவைத் தேர்தல் எதைப் பிரதிபலிக்கிறது?

புதுவை — காரைக்கால் பகுதி, தமிழகத்துக்குள்ளே இருப்பது தான்! திராவிட முன்னேற்றக் கழக அரசு, கடந்த இரண்டாண்டுக் காலமாக எப்படி இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதனே, அம் மாநில மக்கள் கூர்ந்து கவனித்து வந்திருக்கிருர்கள் என்பதனேப் பிரதிபலிக்கிறது.

5. தமிழகத்தின் கோரிக்கைகளே மொரார்ஜி ஏற்றுக்கொள்வாரா?

மொரார்ஜி தேசாய், எதனேயும் ஏற்றுக்கொண்டு பழக்கப்பட்டவரல்லவே!

6. தமிழ் நாட்டின் 'பஞ்ச நிலே'யை கம்யூனிஸ்டுகள் பயன் படுத்திக்கொண்டால்?...

கம்யூனிஸ்டுகளே 'பஞ்ச நிலே' நன்கு பயன்படுத்திக்கொள்ளத் தொடங்கிவிடும்!

7. பள்ளி ஆசிரியர்களுக்குச் சீருடை அவசியமா?

எல்லாவற்றையும்விட மிக முக்கியமான அவசியம், பள்ளிப் பிள்ளேகளே முதலில் படிப்பில் கவனம் செலுத்தச்செய்வதுதான்! இதிலே ஆசிரியர்களும் அக்கறை காட்டச் செய்யவேண்டும்! அதற்கான முயற்சிகளே முதலில் மேற்கொள்வதேவரவேற்கத்தக்கதாகும். ●

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 23—3—69 | இதழ் 36

முதலமைச்சரின் டில்லிப் பணிகள்!

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள், இத்திங்கள் 17, 18-ம் நாட்கள் இந்தியத் தலைநகர் சென்று தலைமை அமைச்சர், துணைப் பிரதமர், மற்றும் பல துறை அமைச்சர்களையும் சந்தித்துப் பயனுள்ள பேச்சு வார்த்தை நடத்திவிட்டுத் திரும்பி இருக்கிறார்.

பேச்சு வார்த்தைகளின்போது, அவசர அவசியமான பல வேண்டுகோள்கள் விடப்பட்டுள்ளன.

இரண்டு மூன்று கிழமைகளுக்கு முன்பு மத்திய உணவமைச்சர் ஜகஜீவன்ராம், தமிழகத் தலைநகருக்கு வருகை புரிந்தபோது, முதலமைச்சர் அவர்கள் ஒரு லட்சம் டன் அரிசி உடனடித் தேவை என்பதை எடுத்துக் காட்டியபோது, இது மிகப் பெரிய அளவு—எனினும் இயன்ற அளவு தர முயல்கிறேன் என்று கூறிச் சென்றிருந்தார்.

டில்லியில், மீண்டும் அவரை முதல்வர் சந்தித்து நிலைமையின் நெருக்கடியை எடுத்து விளக்கி, ஒரு லட்சம் டன்கூட போதாது என்று அறிவித்து, உடனடி நிவாரணமாக இந்த திங்களே 10000 டன் அரிசி தமிழகத்துக்குக் கிடைக்கக்கூடிய நல்ல செய்தியோடு தமிழகம் திரும்பியிருக்கிறார்.

முதலமைச்சர் தன் டில்லிப் பயணத்தில் பிரதமரைச் சந்தித்து தமிழகத்தின் சில மாவட்டங்களில் நிலவும் கடுமையான வரட்சி நிலையைச் சித்திரித்துள்ள விதம் காரணமாகவே, இந்தியப் பிரதமர் தாம் ஒரு நாள் தமிழகம் வந்து, அந்தப் பகுதிகளைப் பார்வையிடுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார் என்று நம்புகிறோம்.

அத்துடன் மத்திய அரசின் சார்பில் ஒரு குழுவினர் வந்து வரட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டுச் செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதற்கும்கூட தமிழக முதல்வரின் வேண்டுகோள்தான் பிரதானமானதாக இருக்க முடியும்.

இந்திரா அம்மையாரும், குழுவினரும் இப்பகுதிகளைப் பார்வையிட்டுச் செல்வதன் மூலம், இருமுறை பருவ மழை பொய்த்ததன் எதிரொலியையும் தமிழக அரசு உணவு—விவசாயத்துறையில் செய்து வரும் அசுர முயற்சிகளும் தெள்ளத் தெளிவான முறையில் மத்திய அரசு உணர்ந்து கொள்ளும் நல்வாய்ப்பினை நல்கக் கூடும்.

இதன் விளைவாக தமிழக முதல்வர், துணைப்பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளபடி 5 கோடி ரூபாய் நிவாரண நிதி கிடைக்காவிட்டாலும், ஒரு கணிசமான அளவு கிடைக்க வழியேற்படக்கூடும். பிரதமர் அவர்களும் தாம் கண்டறிந்தவை மூலம், அதிக உதவி கிடைக்கச் செய்வதிலே தம்முழு ஒத்துழைப்பினையும் காட்டவேண்டிய கடமைக்குள்ளும் தள்ளப்படுகிறார்.

சூட்டோடுசூடாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்ற விஷயமும் முதலமைச்சர் அவர்களால் கிளப்பிவிடப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக தமிழகத்தில் தனியானதோர் நிபுணர் குழு அமைத்து இது பற்றிய அனைத்து விவகாரங்களையும் அலசி ஆய்ந்து கருத்துரை வழங்கும் என்றும், அக்கருத்து மத்திய அரசுக்குப் பரிந்துரையாக வழங்கப்படும் என்றும் கூறி இருக்கிறார்.

வரவேற்கவேண்டியதொரு நல்ல அம்சம் இது. இதே சமயம், இந்தியத் துணைக்கண்டத்தில் மத்திய—மாநில உறவு சீர்குலைவு காரணமாக கைப்படைந்திருக்கிற பிற மாநிலங்களையும், ஒத்துழைக்க முன்வருகிற பிற காங்கிரஸ் ஆட்சியினரையும் கலந்து பெரும்பான்மை மாநிலங்களின் கருத்து என்ற அடிப்படையில் நிபுணர் குழு அமைத்து ஆராயப்படுமானால் நல்ல பலன் விளையக்கூடும் என்று நாம் நம்புகிறோம்.

உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டிய மற்றொரு விவகாரமும் கலைஞர் கருணாநிதி அவர்களால் டில்லியில் விளக்கிவிடப்பட்டிருக்கிறது.

மதுவிலக்குப் பிரச்னையில், காந்தியாருக்கு எந்த அளவுக்குப் பிடிப்பும், வேட்கையும் இருந்ததோ, அந்த அளவுக்குத் தென்னகக் காந்தியாம் பேரறிஞர் அண்ணாவுக்கும் அந்தக் கொள்கையில் பிடிப்பு வலுவாக விருந்தது என்பது அனைவரும் அறிந்ததுதான்!

ஆயினும் இந்தியத் துணைக்கண்டத்தில் காந்தியடிகளின் கழுத்தையே பிடித்து நெறிப்பது போன்ற தன்மையில்—காந்தியடிகள் பிறந்த நாளை விழா நாளாகவே கருதி கொண்டாடி வருகின்ற இந்த நாட்டில்—அவர் பிறந்த நாளான அக். 2லேயே மதுவிலக்கினைத் தளர்த்தி இருக்கிறார்கள் — அதுவும் காங்கிரசுக்காரர்களே தளர்த்தி இருக்கிறார்கள் என்று நினைக்கிறபோது பெரும்பான்மை மாநிலங்கள் அந்தக் கொள்கையினை விரும்பவில்லை என்றே முடிவுக்கு வந்தாக வேண்டியிருக்கிறது.

இந்த நிலையில், ஆண்டொன்றுக்கு 40 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கக்கூடும் என்று மதிப்பிடத்தக்க இத்திட்டத்தை, தமிழகம் இன்று கேள்விக்குறியாக விட்டிருக்கிறது என்றால், புறச் சூழ்நிலைகள் தமிழகத்தை அப்படி நிர்ப்பந்தித்திருக்கின்றன என்பதுதான் பொருளாகும். இதற்காக முதலமைச்சர், இழப்புக்கு ஈடாக இருபது கோடி ரூபாய் மொரார்ஜிதேசாயிடம் கேட்டிருக்கிறார். மொரார்ஜி வியப்பு தோன்ற அமர்ந்திருக்கக்கூடும்–அதே வேளையில் தமிழக முதல்வர் கேள்விக்குறியாக எதிரே அமர்ந்திருக்கக்கூடும்! அந்த நிலையினைத்தான் — மதுவிலக்குப் பிரச்னை ஒரு கேள்விக்குறி என்று அரிய படத்தை நம்முன் காட்டியிருக்கிறார் முதல்வர்!

மற்றும் தொழில்துறை தொடர்பாக, இந்தியத் தொழிலதிபர்களைக் கூட்டிவைத்து நிலைமை விளக்கம் அளித்திருப்பது மிகுந்த நம்பிக்கைக்குரிய ஒன்றாகும். அதுபோல புதிய தொழில்களின் தொடக்கத்திற்கும் அவர்களை அழைத்திருக்கிறார்.

மொத்தத்தில் தமிழ் நாடு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள், தம் முதல் டில்லிப் பயணத்தில் கணிசமான வெற்றியுடனேயே திரும்பியிருக்கிறார் என்பதற்காக அவரைப் பாராட்டத்தான் வேண்டும்.

கேட்டீரா! சேதி!

தி.மு. கழகம் பதவிப் பொறுப்புக்கு வந்த சூட்டோடு சூடாக, விவசாயிகள் பணப் பயிரான கரும்பைப் பயிரிட வேண்டும்; நானும் அப்படித்தான் செய்யப் போகிறேன் என்று மேடை தவறாமல் முழக்கம் செய்தவர் நமது மதிப்பிற்குரிய கருத்திருமனார் அவர்கள்! அதோடு, நெல் விலையைக் கூட்டித் தரவேண்டும் என்றும் வாய்ப்புக் கிடைக்கிற போது கூப்பாடு போடுபவர்! அவர் ஒரு வீர சபதம் இப்போது மேற்கொண்டிருக்கிறார்! பிறரையும் மேற்கொள்ளக் கூறுகிறார்! விரும்பத்தக்க வரவேற்கத்தக்க சபதம் அது! “நாட்டு நலனை அனுசரித்து. உணவுப் பிரச்னை தீரும் வரையில் பிற வர்த்தகப் பயிர்களை சாகுபடி செய்வதில்லை என்று அனைவரும் உறுதி பூணவேண்டும். அந்த உறுதியை இதோ நானே தருகிறேன்” என்று கூறி இருக்கிறார்! இதிலே இன்னொரு முக்கிய அம்சம், இந்தச் சந்தர்ப்பத்தில் யாரும் “பணத்தை மட்டுமே குறியாகக் கொள்ளக்கூடாது” என்றும் அறிவித்திருக்கிறார்! நிலவுடைமையாளர்கள், பெரிய பண்ணைக்காரர்கள் எப்படி நடந்துகொள்ளப் போகிறார்கள் என்பதைப் பொறுத்துதான் பார்க்க வேண்டும்!

* * *

கருத்திருமனார் இப்படிக் கூறியிருப்பது நாட்டில் மொத்தத்தில் ஒரு பஞ்சநிலை தோன்றி இருக்கிறது என்பதன் மேலெழுந்த அனுதாபத்தினால்தான்! இந்த பஞ்சநிலை, வான்மழை பொய்த்துப் போனதனால் ஏற்பட்டதாகும். இந்த வானம் ஏன் பொய்த்துப் போயிற்று? மழை ஏன் பெய்யவில்லை என்பதற்கு நம் சட்ட மன்றத்தில் சுவையானதொரு வாதம் நடந்திருக்கிறது. காடுகளில் மரங்கள் பெரும் அளவுக்கு அழிக்கப்பட்டுப் போனதினால்தான் மழை குறைந்தது என்று ஒருவரும், இல்லை இல்லை, நீலகிரியில் கற்பூர மரங்களை வளர்ப்பதனால், அது நாள் ஒன்றுக்கு 5 டன் நீரை பூமியிலிருந்து உறிஞ்சி விடுவதால்தான் மழை பெய்யவில்லை என்று ஒருவரும் சுவையான தகவல்கள் தந்திருக்கிறார்கள். பருவமழை பொய்த்த தன் காரணம் கண்டுபிடிக்கப்பட வேண்டியதுதான்! கண்டுபிடித்துக் களையப்பட வேண்டியதும் மிக முக்கியமே! அதைவிட முக்கியம் ஏற்பட்டுவிட்டிருக்கிற வரட்சிக்கு நிவாரணம் தேடுவதாகும்! இதனை உணர்ந்த நமது உணவமைச்சர், நீலகிரி கோடைக்கானல் பகுதியில் செயற்கை மழை பெய்விக்கும் முறையினைச் சோதனை செய்து பார்ப்பது பற்றி அறிவிப்புத் தந்திருக்கிறார்! மழை பெய்தது போலவே இருக்கிறது மனதுக்கு! விரைவாகச் செய்யவேண்டும்! பரவலாகச்செய்ய வேண்டும்!

* * *

பாண்டிச்சேரியில் திராவிட முன்னேற்றக் கழகம், பொது உடன்பாட்டோடு, ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருப்பதை, காங்கிரசுக் கட்சியினால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. பிதற்றத் தொடங்கி இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கரங்களில் இரண்டாவது ஒரு மாநிலமும் சிக்குவதா? என்று எண்ணி எண்ணிப் பொருமுகிறார்கள்! இல்லாத செய்திகளையெல்லாம் கட்டவிழ்த்துவிடத் தொடங்கி இருக்கிறார்கள்! மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்று பல்லாண்டுக் காலமாகவே பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டி வந்திருக்கிறார்கள். எனினும் பேரறிஞர் தம் கருத்து. அவர் முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு சூடுபிடிக்கத் தொடங்கி, இன்று ஒரு பிரச்னையாகவே வளர்ந்துவிட்டிருக்கிறது. காமராசர் கூட இது பற்றிக் கருத்துரைக்கும் அளவு முக்கியத்துவமடைந்துவிட்டது! அதோடு, சுப்பிரமணியனார் வரும் ஆண்டுகளில் மத்தியில்கூட ஒரு கட்சி ஆட்சி வருமா? என்று சோதிடம் பார்க்கத் தொடங்கி இருப்பதற்குக்கூட அக்கருத்தின் அடித்தளமே காரணமாகும்! மாநிலங்களை அடிமையாக வைத்ததுபோதும்! அடக்கி ஆண்டதுபோதும்! அவை சுயேச்சையாக இயங்க அனுமதிப்பதுபற்றி ஆலோசிக்க வேண்டிய நிலையை மத்திய அரசு உண்டாக்க வேண்டும் என்பதனைத்தான் காமராசரும் சுப்பிரமணியமும் வெற்வேறு வித வார்த்தைகளால் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்! என்றாலும் பாண்டிச்சேரி முடிவுக்கு இத்தனை மகத்துவம் இருக்கமுடியும் என்று எவரும் எண்ணி இருக்கமாட்டார்கள்! இந்த வகையில் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி பாராட்டுக்குரியவர்தான்! ஏனென்றால் அந்த முடிவுக்கு அவரன்றோ காரணம்!

* * *

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று பகுதிகளை மீண்டும் மறு பரிசீலனை செய்யும் கட்டத்துக்கு மைய அரசு முன்வந்திருப்பதாக வந்திருக்கிற செய்தி வரவேற்கத்தக்கதாகும்! முதல் மூன்று பகுதிகள் மட்டுமல்ல — முழுதுமாகப் பரிசீலனை செய்ய வேண்டும்! மாநில அரசுகளின் மனக்குறைகளை அகற்றும் வகையிலும், மக்களின் சுமை மேலும் ஏற்றப்படாமல்—குறைக்கப்படத் தக்க வகையிலும், தொழில்துறை வளர்ச்சி பரவலாக இருக்கின்ற வகையிலும் அரசுத் தொழில்கள் நட்டமடைவதினின்று விடுபட்டு, லாபம் ஈட்டத்தக்க வகையிலுமாக அது இருக்குமாறு பார்த்துக்கொள்ளும் வகையில் மறுபரிசீலனை மேற்கொள்ளப்படவேண்டும்! நடக்குமா இது? ஆசை அனைத்தும் ஈடேறுமானால் அப்புறம் மத்திய அரசு தான் எதற்கு? மாநில அரசுதான் எதற்கு?

முகப்பில்: பாண்டிச்சேரி முதல் அமைச்சர் பரூக் மரக்காயர் அவர்கள்,

****

விற்பனையாளர்களுக்கு

மார்ச் இறுதியுடன் ஆண்டுக்கணக்கு முடிக்கவேண்டியிருப்பதால், விற்பனையாளர்கள் அனைவரும், தங்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பிவைத்து ஒத்துழைக்கக் கோருகிறோம். பாக்கி அனுப்பாதவர்களுக்கு கண்டிப்பாய் இதழ்கள் நிறுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர்.
‘காஞ்சி.’
காஞ்சிபுரம்-8

****

மாமியார் வீட்டில்...

மாமியார் வீட்டிலே மதிப்புப்பெற விரும்பிய மாப்பிள்ளை கதை தெரியுமா உனக்கு' கலியாண நாட்களிலே, கிராமத்துப் பெரியவர்கள் யாராவது கிடைத்தால் கேட்டுப்பார். சொல்லுவார்கள், சுவையாக இருக்கும்.

பொதுவாகவே, மாப்பிள்ளைக்கு மாமியார் வீட்டிலே மதிப்புபெற வேண்டும் என்பதிலே ஒரு அலாதியான ஆசை உண்டு; தன் வீட்டிலே அந்த மதிப்பு இல்லாமற் போனாலும் பரவாயில்லை, மாமியார் வீட்டிலே மதிப்புக் கிடைக்கவேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறைகொள்வான். நீண்ட காலமாகவே இருந்து வரும் ஒரு வேடிக்கையான சுபாவம்—பழக்கம்—முறை.

கவனித்தாயா தம்பி, மாமியார் வீடு என்றுதான் சொன்னேன், மாமனார் வீடு என்று சொல்லவில்லை; காரணம் புரிகிறதல்லவா. மாமியார்தான் அங்கு ஆட்சி செலுத்துவது, மாமனார் வெறும் கிருஷ்ணமேனன்தான், இலாகா இல்லாத மந்திரி! இங்கும் அங்கும் சென்று மேலிடத்துச் செய்தியைக் கூறிவிட்டு வருவது!

மாமியார் வீட்டிலே மதிப்புப்பெற விரும்பாத மாப்பிள்ளை இல்லை; மருதமுத்து இதற்கு விலக்கல்ல; எனவே தன் நண்பனிடம் கேட்டானும், மாமியார் வீட்டிலே மதிப்புப் பெறுவதற்கு என்னடா வழி என்று. நண்பன், அந்தக் கிராமத்தில் 'ஆயிரந் தொழில்' தெரிந்த அனுபவசாலி என்று பெயரெடுத்தவன், அவன் சொன்னான், "மருது! மாமியார் வீட்டிலே மதிப்புப் பெறுவது மிகமிகச் சுலபமான காரியம். அங்கு எதை அவர்கள் அன்புடன் உபசாரத்துக்காகக் கேட்டாலும் நீ வேண்டாம்! வேண்டாம்! எனக் கூற வேண்டும்; பால் வேண்டுமா மாப்பிள்ளை! பதிர்பேணி வேண்டுமா மாப்பிள்ளை! லாடு கொஞ்சம் சாப்பிடுங்களேன் மாப்பிள்ளை—என்று மாமியார் சொன்னவுடன், பல்லை இளித்துக்கொண்டு, கொடுங்கள், கொடுங்கள் என்று கேட்டால், ஏதேது! இது சுத்தப் பஞ்சைபோலவே இருக்கிறது—என்று எண்ணிக்கொள்வார்கள் — மதிப்புப் பிறக்காது — பசியே வந்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும்—'பிகுவு' மட்டும் விடக்கூடாது" என்றான்.

மருதமுத்து, இதில் ஒரு கஷ்டமும் இல்லை; நாலு நாளைக்குப் பல்லைக் கடித்துக் கொண்டு இருக்கவா முடியாது என்று எண்ணிக்கொண்டு, மாமியார் வீட்டுக்குக் கிளம்பினான்.

சிம்மிளி—என்றோர் சுவையான பண்டம் செய்வார்கள் தம்பி, உனக்குத் தெரியுமோ என்னவோ! கேழ்வரகுடன் வெல்லமும், மணம்தர வேறு சில சில்லரைச் சரக்குகளும் கலந்து உரலிலிட்டு 'மசிய' இடித்து எடுப்பார்கள், பதமாகச் செய்தால், அந்த இனிப்புப் பண்டம், மணம் பெற்றுத் தனியானதோர் சுவை தருவதாக இருக்கும்.

இடிக்கும்போதே கிளம்பும் மணம், உரலைக் கழுவி உலர்த்தும் வரையில் இருக்கும்.

"மாப்பிள்ளை! சிம்மிளி சாப்பிடுங்கோ"

மாப்பிள்ளை பிகுவு நாக்குக்குத் தெரியுமோ?

''ஊஹூம், வேண்டாம்''

''ரொம்பச் சுவையாக இருக்கும் மாப்பிள்ளே''

''வேண்டாம், வேண்டாம்! எனக்குப் பிடிக்காது''

''சிம்மிளியா பிடிக்காது; மணமாக இருக்கும், மதுரமாக இருக்கும், சாப்பிட்டுத்தான் பாருங்களேன், ஒரு விளாங்காயளவு''

''ஐயயே! எனக்கு அந்த 'நெடி'யே பிடிப்பதில்லை''

''எலுமிச்சம் பழ அளவாவது சாப்பிடுங்க. உங்களுக்காக எத்தனைக் கஷ்டப்பட்டு, நானே இடித்துச் செய்தது மாப்பிள்ளை''

''தொந்தரவு செய்யாதீர்கள். எனக்கு இந்தப் பலகாரமெல்லாம் பிடிக்காது''

மருதமுத்து அபாரமான திறமையுடன் நடந்து கொண்டான்; பண்டத்தின் மணம் மூக்கைத் துளைத்தது, நாக்கில் நீர் ஊறிற்று, சபலத்துக்குத் துளியும் இடம்தரவில்லை, வேண்டவே வேண்டாம் என்று கூறிவிட்டான்.

இந்த ஒரு சம்பவம் போதும், மாமியார் வீட்டிலே தன் மதிப்பு வேகமாக வளரும் — அமெரிக்கக் கடன் கிடைத்தவுடன் டாட்டா கம்பெனி 'ஷேரின்' விலை ஏறுவதுபோல, மதிப்பு உயரும் என்று எண்ணிக் கொண்டான்.

''எவ்வளவு உறுதியாக இருந்துவிட்டோம்! நாக்கிலே நீரே ஊற ஆரம்பித்துவிட்டது. அவ்வளவு மணம்; சுவைமிக்க பண்டம்தான். சாப்பிட்டிருக்கிறேன் பல தடவை; எவ்வளவு தின்றாலும் தெவிட்டாது —என்று மாப்பிள்ளை தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

வீணான பிகுவு
பிடிவாதம்
கௌரவம் பார்க்கிறார்.

என்று ஏதேதோ, பேசிவிட்டு கணவன் ஆமோதிப்பைப் பெற்றுக்கொண்டு மாமியார் கண் அயர்ந்தாள், மகளைப் பக்கத்தில் படுக்கவைத்துக்கொண்டு!

உரல், அழைக்கலாயிற்று மாப்பிள்ளையை!

மணம், காற்றடிக்க அடிக்க, 'கமகம'வெனக் கிளம்புகிறது; மாப்பிள்ளையின் மூக்கைத் துளைக்கிறது, நாவில் நீர் ஊறுகிறது, பண்டத்தின் சுவைபற்றிய எண்ணம் வந்து தாக்குகிறது! புரண்டு புரண்டு படுக்கிறார் மாப்பிள்ளை, விடுவதாக இல்லை, மணம்!

கொஞ்சம் சாப்பிட்டிருக்க வேண்டும்!

ஒரு விளாங்காய் அளவு!

எலுமிச்சம் பழ அளவாவது சாப்பிட்டிருக்கலாம்,

மாமியார், கெஞ்சித்தான் கேட்டாள்.

நான்தான் சற்று அதிகமாகவே 'பிகுவு' காட்டிவிட்டேன்.

இந்தச் சனியன், மூக்கைத் துளைத்து, நாக்கைக் கொட்டுகிறது.

மாப்பிள்ளை. பாவம், 'சிம்மிளி' தவிர வேறு எது பற்றியும் எண்ண முடியாத நிலைபெற்றுப் பரதவித்தான்.

விசித்திரமான யோசனை—நிலைமைக்கு ஏற்றபடி—எழுந்தது அவன் உள்ளத்தில்,

உரலில், சிம்மிளிகொஞ்சமாவது ஒட்டிக்கொண்டு இருக்குமல்லவா!

எவ்வளவு திறமையாக வழித்தெடுத்துவிட்டாலும் சிறிதளவாவது நிச்சயம் உரலில் இருக்கத்தான் செய்யும் — கிடைக்கும் — அதையாவது எடுத்து வாயில் போட்டுக்கொண்டால்தான், இந்தப் பாழும் ஆசை தீரும் என்று எண்ணினான்; அடுத்த விநாடி, மெள்ள பூனைபோல நடந்தான், உரல் இருக்கும் இடத்துக்கு.

''எனக்குத் தெரியுமடா மாப்பிள்ளை! நீ குஞ்சாலாடு, குலாப்ஜான், அதிரசம், ஆமவடை, எதை வேண்டுமானாலும், இழக்கலாம், என்னை மட்டும்விட்டுவிட, உன்னைவிட 'வீராப்பு'க் கொண்டவர்களாலும் முடியாது; ஓசைப்படாமல் நடுநிசியில் வருகிறாயா, வா! வா!'' என்று மணம் அழைத்தது; மாப்பிள்ளை சுற்றுமுற்றும் பார்த்தபடி, உரலருகு சென்று, கரத்தைவிட்டு உள்ளே துழாவினான் — அடியில் சிறிதளவு ஒட்டிக் கொண்டிருந்தது வழித்தெடுக்க எளிதாக இல்லை! எடுப்பதற்கு முடியாத நிலை, அவனுடைய ஆசையை ஆயிரமடங்கு அதிகமாக்கிவிட்டது. உரலடியிலே இருப்பதால், மணம் மிகவும் தொல்லைதந்தது, நாவிலிருந்து சொட்டுக்களே விழ ஆரம்பித்தன. ஆவல் மிகுதியால், தலையைக் குனிந்தான்—மேலும் மேலும்—அடியில் ஒட்டிக்கொண்டிருக்கும் 'சிம்மிளி'யைக் கண்டறிந்து எடுக்க!

அப்பாடா! கிடைத்தது! மகிழ்ச்சியுடன் மாப்பிள்ளை, நிமிர்ந்திடலானான் — முடியவில்லை—தலை 'கலவடை'யில், உரலின் மேல் பாகத்தில் மாட்டிக்கொண்டது, வரவில்லை.

''ஐயோ!'' என்று அலறிவிட்டான்—என்ன என்ன? என்று கேட்டபடி, ஓடிவந்த மாமியார், மாப்பிள்ளை இருக்கும் 'கண்றாவிக்' கோலத்தைக் கண்டு விழுந்து விழுந்துச் சிரித்தாளாம்.

மாமியார் வீட்டிலே மதிப்புப்பெற மதிகெட்ட மாப்பிள்ளைகள் முயற்சித்து இவ்விதமான அலங்கோலப்படுவதுண்டு.

நமது காங்கிரஸ் தலைவர்கள், டில்லியிடம் மதிப்புப் பெற, பல்வேறு விதமான முயற்சிகள், விசித்திர விசித்திரமாக எடுத்துக்கொண்டு, பல தடவைகளில், கதையில் காணுகிறோமே 'மாப்பிள்ளை' அதுபோலாகிவிடுகிறார்கள், அப்படியானால், அண்ணா! மாமியார் வீட்டிலாகட்டும், டில்லியிலாகட்டும், 'மதிப்பு' பெற என்னதான் சரியான வழி சொல்லு கேட்போம் என்று கேட்டுவிடாதே, தம்பி, நான் அந்த 'வித்தையைக் கூற அல்ல இதைச் சொன்னது.

மதிப்புக் கிடைக்கவேண்டும் என்ற மன அரிப்பு எடுத்து விடுகிறது காங்கிரஸ் தலைவர்களுக்கு. அதனாலே, பாபம் அவர்கள், 'கலவடை'யைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு கலங்கிய மாப்பிள்ளை போலாகிவிடுகிறார்கள் பல சமயங்களில்.

இதற்கு, எந்தக் காங்கிரஸ் தலைவரும் விதிவிலக்கு அல்ல.

ஒவ்வொருவருக்கு ஒவ்வோர் முறை இருக்கிறது. அவரவர் திறமை, பழக்கம், பயிற்சிக்குத் தக்கபடி—ஆனால் ஒவ்வொருவரும் எப்படியாவது, டில்லியின்

பதவிச் சுவைக்கும் பாக்கியம் கிடைக்குமோ?

மதிப்பைப் பெறவேண்டும் என்று முயற்சித்தபடி இருக்கிறார்கள்.

இதிலே சுவையான பகுதி என்ன தெரியுமோ? எனக்குத்தான் டில்லியில் மதிப்பு அதிகம்—அவரைச் சீந்துவதில்லை—என்னிடம் தான் டில்லிக்கு நம்பிக்கை—அவரிடம் ஒரு துளியும் நம்பிக்கை கிடையாது—என்று ஒவ்வொரு தலைவரும் எண்ணிக் கொள்வதும், நண்பர் குழாத்திடம் கூறிக்கொள்வதும்தான்!

டில்லியோ, 'தட்டிவிட்டு' வேடிக்கைபார்ப்பது, பலனும் சுவையும் தருகிறது என்பதை நன்கு அறிந்து கொண்டு விட்டது.

எந்தக் காங்கிரஸ் தலைவர் எந்தச் சமயத்தில், ஆட்சிப் பீடத்தில் இருக்கிறாரோ, அவரிடம் டில்லி மதிப்பு, அன்பு, நம்பிக்கை, இருப்பதாகக் காட்டிக் கொண்டே இருக்கும்—எது வரையில்?—அவர் 'பரிபூரண அடிமை'யாக இருக்கும் வரையில்—அவர் உள்ளத்திலே ஒரு துளி சுதந்திர உணர்ச்சி—தன்மானம்—துளிர்க்கிறது என்று தெரிந்தால் போதும், அவர்மீது பாயச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கும் 'ஆசாமிகள்' இருக்குமிடம் நோக்கி, புன்னகை பொழியும், கருணையைக் காட்டும் கண் சிமிட்டும்!! பதவிக்கு ஆபத்து வந்துவிடும் என்று பயம் பிடித்துக்கொண்ட நிலையில் மீண்டும் பணிய குனிய, குழைய, கெஞ்சிட, முன் வந்து, 'மதிப்பு'ப் பெற முயற்சி எடுத்துக்கொள்வர், பதவிப் பசையில் சிக்கிக்கொண்டோர்! பதவிப்பசி எமக்கு இல்லை என்று கூறிடவும், அந்த உறுதியுடன் நடந்திடவும் முனைவரேல், பாய்ந்து பிய்த்துத் தின்றிடக் காத்துக்கிடப்போரிடம், டில்லி பாசவலை வீசும்—நாச வேலையை, அவர்கள் வெற்றிகரமாக்கிக் காட்டுவர்.

காஷ்மீரச் சிங்கமென்று உலகுக்கே அறிமுகப் படுத்தப் பட்டவர், வகுப்புவாதப் பேயைச் சாடிச் சாடி ஓட ஓட விரட்டி அடிக்கும் மந்திரவாதி என்று தமிழகத்துக்கு அழைத்துக்கொண்டு வரப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டவர். ஜனாப் ஜின்னாவின் செல்வாக்கையே சின்னாபின்னமாக்கத்தக்கவர் என்று இஸ்லாமிய உலகுக்கு 'சிபாரிசு' செய்யப்பட்டவர் தம்பி, ஷேக் அப்துல்லா! பாபம்! வழக்கு இல்லை, விசாரணை இல்லை, உள்ளே சென்ற நாளைக்கூட உலகம் மறந்து விட்டது, சிறையிலே தள்ளப்பட்டிருக்கிறார்—காரணம்?—அவர் சிறிதளவு உரிமை உணர்ச்சியை வெளியிட்டார்—டில்லி, ஒரு குலாம் பக்ஷியைப் பிடித்திழுத்து வந்து பீடத்தில் அமர்த்திவிட்டது!

ஷேக் அப்துல்லாவின் கதியைக் கண்ட பிறகு, ஒவ்வொரு மாநிலக் காங்கிரஸ் அமைச்சர்களுக்கும் 'அஸ்தியில் ஜுரம்' கண்டு விட்டது!! எந்தச் சமயத்தில், என்ன காரணத்தால், டில்லிக்குக் கசப்பு வந்துவிடுமோ—டில்லிக்கு என்னென்ன வகையான இனிப்பு ஊட்டவேண்டுமோ—யாரேனும் ஏதேனும் போதனை செய்துவிடுவார்களோ — என்ற திகில் குடைந்தபடி இருக்கிறது. இதை நன்கு தெரிந்து கொண்ட டில்லி, இவர்களை ஆட்டிப்படைக்கிறது. இதை மக்கள் எங்கே தெரிந்துகொண்டு விடுகிறார்களோ என்ற பயம் வேறு இவர்களைப் பிடுங்கித் தின்கிறது! எனவே டில்லி நோக்கிப் பல்லைக் காட்டுவதும், இங்குள்ள மக்களை நோக்கிப் படாடோபம் வீசுவதுமாகக் காலந்தள்ளியபடி உள்ளனர். சிரமமான வேலை! ஆனால் செய்து தீரவேண்டியதாக இருக்கிறது. அவர்கள் பால், தம்பி' ஒரு வகையில் நாம் பச்சாதாபம் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால், தம்பி. நாம் மருதமுத்துவைக் கேட்போம், இதற்கான விளக்கம் கூறுவான்.

"மருதமுத்து! மாமியார் வீட்டிலே மதிப்புப் பெற வேண்டும் என்று, ஏனப்பா, முயற்சி எடுத்துக்கொண்டாய்? ஏன் உனக்கு அந்த எண்ணம் தோன்றிற்று?"

"உண்மையைச் சொல்லிவிடுகிறேன். மாமியார் வீட்டார் என்னை மதிக்கமாட்டார்கள் என்றோர் பயம் எனக்கு. படிப்பு அதிகம் இல்லை. பண வசதியும் மட்டு. எந்த விதமான புகழ்பெறவுமில்லை! வாத நோய் வேறு என் உருவத்தைக் கெடுத்து விட்டது!—இதனால், மாமியார் வீட்டிலே மதிப்பாக நடத்த மாட்டார்களே, என்ற பயம், சந்தேகம் எனக்கு".

மருதமுத்துவாவது தன் உயிர்த்தோழனிடம் இந்த உண்மையைக் கூறுவான்—நமது காங்கிரஸ் தலைவர்கள் மட்டும் உண்மையைக் கூறமாட்டார்கள்!!

ஆனால், ஒருவர்மீது ஒருவர் 'சாடி' சொல்லும் போது மட்டும் உண்மையைக் 'கசிய' விடுவார்கள்.

தட்சிணப் பிரதேசத் திட்டத்தை, நிதி மந்திரி சுப்ரமணியமும், சேதுபதியும் ஆதரித்துப் பேசினர்—காரணங்கள் கூடக் காட்டினர்—அவர்களை மறுத்த முதலமைச்சர் தட்சிணப் பிரதேசத் திட்டம் இத்தகைய கேடுபயப்பது என்று விளக்கினாரா? இல்லை! தட்சிணப் பிரதேசத் திட்டத்தை எதிர்த்து தமிழகத்தில் எல்லாக் கட்சிகளும் (சர்க்கார் கட்சியும் சல்லாபக் கட்சியுந் தவிர) நடத்திய வெற்றிகரமான 'அர்த்தால்' மூலம் தமிழகம் தட்சிணப்பிரதேசத் திட்டத்தை வன்மையாகக் கண்டிக்கிறது என்பது விளங்கிவிட்டது. நாடே எதிர்க்கிறபோது, அந்தத் திட்டத்தை நான் எப்படித் திணிக்க முடியும், என்று விளக்கம் அளித்தாரா? இல்லை! ஆனால் என்ன காரணம் காட்டினார்?

டில்லி சர்க்காரை களிப்படையச்செய்து, அங்கு பெரிய மந்திரிவேலை பெறலாம் என்ற ஆசையால் சிலபேர் தட்சிணப் பிரதேசத்தை ஆதரிக்கிறார்கள்!!

இத்தகைய சபலம்கொண்ட, பதவிமோகம் பிடித்தலையும், 'உதவாக்கரை'களை, சகாக்களாகக் கொண்டு அமைச்சர்குழுவினை நடத்திச்செல்வது, காமராஜருக்கே இழுக்கல்லவா?—என்று நாம் ஏன் கேட்கவேண்டும். தம்பி, கேட்டால். அவர் "நான்தான் பச்சையாகச் சொன்னேனே, இதுகள் உதவாக்கரைகள், பதவி மோகம் பிடித்தலைபவர்கள்!" என்று. 'ரோஷம்' இருந்தால், அவர்களல்லவா, இப்படி எங்களை அலட்சியப் படுத்தி, பொதுமக்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியவரின் தலைமையில் நாங்கள், கேவலம் சில ஆயிரம் ரூபாய்களுக்காக, தன்மானத்தை இழந்து மந்திரிவேலை பார்க்கமாட்டோம்—பண்புதான் பெரிது, பதவி அல்ல! மானம் உயிரினும் பெரிது என்று போற்றிடும் தமிழ் மறக்குடியினர் நாங்கள், எங்களைப் பதவிப் பித்தர்கள், உதவாக்கரைகள் என்று பொதுமக்கள் முன்னிலையில் முதலமைச்சர் சொல்லியானபிறகும் நாங்கள், பதவியில் இருத்தல், மிக மிகக் கேவலம், இதோ எங்கள் 'ராஜிநாமா'க் கடிதம்!!—என்று கூறி விலகல் கடிதத்தை என் முகத்தில் விட்டெறிந்துவிட்டு, வீரதீரமாய்,

சென்னை நிதி டில்லி நிதி இரண்டும் தந்து...

மந்திரிசபையிலிருந்து வெளிஏறிவிடுவதுதானே! வீரப் பேச்செல்லாம், நான் சவுக்கடி கொடுத்ததும், 'விக்கல், விம்மல்' ஆக அல்லவா மாறிவிட்டது!!" என்று சொல்லக்கூடும்.

அதிலே உண்மை இருக்கத்தானே செய்கிறது, தம்பி! உண்மையாகவே, தட்சிணப் பிரதேசத் திட்டத்தில், இந்த அமைச்சர்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருக்குமானால், அதை மக்களிடம் விளக்கிப் பேசியதற்காக, உதவாக்கரைகள் என்றும், மேலிடத்துக்கு மனுப்போடுபவர்கள் என்றும், டில்லியில் மந்திரிவேலை தேடுபவர்கள் என்றும், என்றையத்தினம் முதலமைச்சர் ஒளிவுமறைவு இன்றி, மக்கள் மன்றத்திலேயே எடுத்துரைத்தாரோ, அப்போதே அல்லவா, அமைச்சர் பதவியை உதறித்தள்ளிவிட்டு, தமிழினம் தன் பண்பினை இழந்துவிடவில்லை, எம்மைக் காணீர்!—என்று அறிவித்திருக்கவேண்டும்.

தட்சிணப்பிரதேசத் திட்டத்துக்கு ஆதரவு வளருமோ இல்லையோ, நிச்சயமாக, தமிழ் இனத்தின் மாண்பல்லவா உயர்ந்திருக்கும்! கொங்குநாடு, விழாவே கொண்டாடி இருக்கும்—எமது திருமகன், சென்னை நிதி டில்லி நிதி இரண்டும் தந்து, தில்லியோடு தமிழாளத் தருவரேனும், பங்கமுற வேண்டுமெனில், பதைத்தெழுவார், பதவியினைத் துச்சமென வீசிடுவார், என்று பதிகமேபாடும்! தென் பாண்டிமண்டிலம், சேதுபதி, குலப்பெருமையை, குடிப்பெருமையை, நிலை நாட்டிவிட்டார் என்று குதூகலித்திருக்கும்! இந்தியத் துணைக் கண்டமே, இவ்விருவரின் பெயர் கூறி வியந்திருக்கும், ஆனால், தம்பி, பாபம், மாவட்டக் கலெக்டரிடம்

டாமிட்
நான்சென்ஸ்
இடியட்
கூஸ்

என்றெல்லாம் 'வசைமொழி' கேட்டுக்கொண்டும், வேலையை விட்டு விட்டால் வேட்டிதுவைத்துப்பிழைக்கவும் முடியாதே என்றெண்ணி, தம் விதி! துரை, ஏதோ கோபத்தில் இருக்கிறார்! என்று சமாதானம் கூறிக்கொண்டு, வேலை பார்த்துவரும் தாசில்தார் போலல்லவா, நிதி அமைச்சர் நடந்துகொண்டார்—சேதுபதியுமல்லவா அவர் வழி சென்றார்!

ஏட்டிலேயும் சரி, நாட்டு நடப்புகள் பற்றிக்கூறிடும் நாளிதழ்களிலும் சரி, ஒரு முதலமைச்சர் இவ்வளவு வெளிப்படையாக, உதவாக்கரைகள் — பதவிக்காக அலைபவர்கள்—என்று பேசியபிறகும், பதவியில் ஒட்டிக்கொண்டு இருக்கும், மந்திரிகளை, நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை!

நானறிந்தவரையில், நாக்கில் நரம்பின்றி பலர் எந்த ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களை இழித்தும் பழித்தும் பேசினரோ, அவர்களில் ஒருவரிடமாவது "சொரணை கெட்டதனமும்", "பதவிக்காக மானத்தை இழந்திடும் கொடுமதியும்" இருந்ததில்லை.

யாரோ ஒரே ஒரு உறுப்பினர்தான், 'நம்பிக்கையில்லை' என்று முணுமுணுத்தார்—அதுகேட்ட நமது மறைந்த மாவீரர் பாண்டியன், அந்நாளே, மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர் பதவியை உதறித் தள்ளிவிட்டு, தமிழ்ப் பண்புக்கு உள்ள உரத்தை உலகறியச் செய்தார்!

இதோ இரு அமைச்சர்கள்!! முதலமைச்சர் வீசிய சிறு சொல்லைக் கவனித்தால் பில்லைபோட்ட சேவகன் எங்கிருந்து கிடைப்பான் என்று கேட்கிறார்களே! இந்த இலட்சணத்தில், எதிர்க்கட்சிகளை ஏளனம் செய்ய நாக்குவேறு நீளுகிறது!!

"சரி, சரி சந்தடி சாக்கிலே கந்தப்பொடி விற்கக் கிளம்பிவிடாதே! நாங்கள் உதவாக்கரைகள், பதவிக்காகப் பல் இளிக்கிறோம், என்று அவர் கூறிவிட்டார்—சரி என்றே வைத்துக்கொள்வோம் — இப்படிப்பட்ட எங்களை ஏனய்யா, இந்த வீராதி வீரர், விரட்டக்கூடாது? நாங்கள் இன்னமும் மந்திரிசபையில்தானே இருக்கிறோம்! உதவாக்கரைகளை ஏன் வைத்துக் கொண்டிருக்கவேண்டும்? தைரியமிருந்தால், எங்களை போகச்சொல்லட்டும்! பார்ப்போம்! போகச்சொல்லட்டும் அப்போது, நமது சக்தி என்ன, நமக்கு இருக்கும், "ரதகஜதுரகபதாதிகள்" எப்படிப்பட்டது என்பதைக் காட்டுவோம்! முதலமைச்சர் பதவி இவருக்கு நிலைக்கிறதா என்பதையும் பார்த்துவிடுவோம் என்றுதானே நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம்" என்று நிதி அமைச்சர் பேசக்கூடும்.

இதிலும், உண்மை இல்லாமற் போகவில்லை!

இந்த அமைச்சர்கள், உதவாக் கரைகள்—ஊறு செய்தேனும் உயர்ந்த பதவி தேடுபவர்கள் என்பது முதலமைச்சருக்குத் தெரிந்திருக்கும்போது, அதை மக்களுக்கே தெரிவித்தாக வேண்டும் என்று அவருக்குப் பொறுப்புணர்ச்சி பொங்கி வழிந்திருக்கும்போது, அவர் நிச்சயமாகச் செய்திருக்க வேண்டியது, ஊசல் பண்டத்தைக் குப்பையில் போட்டு விட்டேன், உடைந்த பாண்டத்தை வீசி எறிந்துவிட்டேன், உதவாக் கரைகளை, விரட்டி விட்டேன், என்றல்லவா ஊராருக்கு அறிவித்திருக்க வேண்டும்? செய்யவில்லையே!! ஏன்? சிந்தையில் நடுக்கம் என்கின்றனர் சிலர்.

அது எப்படியோ போகட்டும். மக்கள் என்ன எண்ணிக்கொள்வார்கள்? உதவாக்கரைகள் என்று முதலமைச்சரால் ஏசப்படுபவர்கள் நிதி, மதி ஆகியவற்றின் காவலர்களா!! என்ன அக்ரமமய்யா இது! இவர்கள் இத்தகைய பதவிப் பித்தர்கள், பயனில் மாந்தர் என்று தெரிந்தும், இவர்களை ஏன், ஆளச் சொல்கிறீர்கள்?—என்று கேட்க மாட்டார்களா? கேட்கிறார்கள்!!

ஆனால் ஏன் இந்தக் கூத்து நடைபெறுகிறது—டில்லியில் யாருக்கு மதிப்பு என்பதைக் கண்டறியும். பலப் பரீட்சையில், இருதரப்பினரும், ஈடுபட்டுள்ளனர். இதில் எந்தப் பக்கம் டில்லி சாய்கிறதோ. அந்தப் பக்கம் வலிவு பெறும்—இதுதானே இன்றுள்ள நிலைமை!!

டில்லிக்கு இந்த 'வாய்ப்பு' இருப்பதனால்தான், இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள், டில்லியின் மதிப்பினைப் பெற, பல்வேறு வகையான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள்—சில சமயங்களில் கதையில் கண்டோமே 'மாப்பிள்ளை'—அது போன்ற கண்றாவியும் நேரிட்டுவிடுகிறது.

காந்தியார் காலத்தில் ஒருமுறை, ஆச்சாரியார் காமராஜர் தகராறு கிளம்பி, ஊர் சிரிப்பாய்ச் சிரித்தது.

சின்ன தலையும் பெரிய தலைமையும்?

தம்பி! கோடு உயர்ந்தது! குன்றம் தாழ்ந்தது என்று அப்போது நான் ஓர் தலையங்கம் தீட்டினேன்.

ஆச்சாரியார், அப்போது காந்தியாரின் மதிப்பினைப் பெற்றிருந்தார்—எனவே, காமராஜர்மீது காந்தியார் கண்டனத்தை வீசினார்!!

சூழ்ச்சிக்காரக் கும்பல்—என்ற பொருள் பட, காமராஜர்மீது காந்தியார் கண்டனம் வீசினார்.

சின்னத் தலை படைத்த பெரிய தலைவர்!—என்று காமராஜர் குறித்து, கல்கி எழுதினார்–படமும் தீட்டினார். அது பழங்கதை! ஆனால் முற்றுப் பெறாதது!!

இப்போதும் அதே போன்ற 'சூழ்நிலை' உருவாகிக் கொண்டு வருகிறது என்பது சிறு சிறு செய்திகள் மூலம் தெரிகிறது! அப்போது போலவே இப்போதும் டில்லியில் மதிப்பு எப்படிப் பெறுவது? என்பதுதான், போர்முறையாகவும், வாழும் வழியாகவும் இருந்து வருகிறது.

இதிலே, யார் வெற்றி பெறுகிறார்கள் என்பதல்ல முக்கியம்—நாம், தம்பி, எந்தத் தரப்புக்கும் முட்பொறுக்கி வேலைக்காக முந்திக் கொண்டிருக்கவில்லை—நான் இதிலே தொக்கி நிற்கும் வேறோர் பிரச்சினையைக் கவனிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். வெற்றி மாலையும் வீரகண்டாமணியும் யாருக்குக் கிடைக்கிறது என்பதல்ல பிரச்சினை—டில்லியிடம் மதிப்புப் பெறுவதுதான், இங்கு செல்வாக்கு நிலைத்திருக்கச் செய்வதற்கான வழி என்ற கேடான, கேவலமான, சூழ்நிலை இருக்கிறதே, இதைக் கவனிக்க வேண்டும்—இதுதான் மக்கள் கூர்ந்து பார்த்திட வேண்டிய பிரச்சினை.

எத்துணைதான் 'தேசீயம்' கொண்டிருப்பினும் நாட்டின் பல்வேறு துறைகளிலும், குறிப்பாக, மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் வாய்ப்புகளாக உள்ள எந்தத் துறையினைக் கவனிக்கும்போதும், வடநாடு தலைமைப் பீடமாகி ஆதிக்கம் செலுத்துவதையும், தென்னாடு அடிமையாகி அடங்கி ஒடுங்குவதையும், காணாமலிருக்க முடியாது! காங்கிரஸ்காரர்கள் கூடத் தான்!! அந்த வெட்கக்கேடு நமக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதிலே அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி நம் எதிரே, ஏதும் வேதனையற்றோர் போல நடிக்கிறார்கள்—உள்ளூர அவர்கட்கும் வேதனை பீறிட்டு எழத்தான் செய்கிறது.

'அகில இந்தியா' — என்ற அடைமொழியுடன் இயங்கும் எந்த அமைப்புக்கும், தம்பி, தலைமை வடக்கிலேதான்,

இங்கே பேரறிவாளர் உளர்—வீரர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்! ஆனால் அவர்கள் செக்கிழுக்க! தலைமை தாங்கவோ, வடநாடுதான், அருள்கிறது!!

அகில இந்திய காங்கிரசுக்குத் தலைவர்—தேபர்—வடநாட்டார்!

அகில இந்திய முதலமைச்சர்—நேரு பண்டிதர்—வடநாட்டவர்.

அகில இந்திய கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் தலைவர்—அஜாய்கோஷ்!

அகில இந்திய பிரஜா சோஷியலிஸ்டுகளை நடத்திச் செல்ல, ஜெயப்பிரகாஸ் நாராயண் கிருபளானி, அசோக்மேதா!!

அகில இந்திய சோஷியலிஸ்டுக் கட்சிக்கு, டாக்டர் லோகியா!

அகில இந்திய இந்து மகா சபையை நடத்திச் செல்ல கோல்வால்கர்!

இராமகிருஷ்ண மடாலய இயக்கம், ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், அகில இந்திய இந்தி பிரச்சார சபா—எதிலும், தலைமை அமைந்திருப்பது வடக்கேதான்!

உன்னிடம் உண்மையைச் சொன்னால் என்ன, தம்பி, நான் சின்னாட்களுக்கு முன்பு வினோபாவைக் கண்டேனல்லவா—பெருமதிப்புக் கொண்டேன்—எனினும் என் உள்ளத்திலே ஓர் எண்ணம் தோன்றி என்னை உறுத்தத்தான் செய்தது.

ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்திருக்கிறார் வினோபா.

மொழியால், மாநிலத்தால் பழக்க வழக்கங்களால், வேறுபட்டவர். எனினும் அவர் ஈடுபட்டுள்ள காரியம் மக்கள் தொண்டு என்று தெரிந்தவுடன், நம் தமிழகத்துச் சிற்றூரில் அவர் வருகையை விழாவாக்கி, அவர் பேச்சை உபதேசமாகக் கொண்டு, அவர் காட்டும் வழி நடக்க முயற்சிக்கிறார்கள்.

தமிழகத்துச் சிற்றூர்களிலெல்லாம், சொந்தத்துடன் பந்தத்துடன் அவர் வருகிறார் – வரவேற்கும் பெரிய உள்ளம் நமது மக்களுக்கு இருந்திடக் காண்கிறேன்.

இதைக் கண்டபோது நான் எண்ணிக்கொண்டேன், கடந்த நூறு ஆண்டுக் காலத்தில் இதுபோல ஒரு தமிழர்–வடநாட்டில், குக்கிராமங்களிலும் வரவேற்கப்பட்டு, 'பவனி' நடத்தியதுண்டா? இப்போதாவது முடிகிறதா!

திருக்குறளையும், திருவாய்மொழியையும் தாம் கற்றறிந்ததைத் தமிழரிடம், தமிழகத்தில், வினோபா எடுத்துக் கூறுகிறார் — போற்றுகிறோம்—பூரிக்கிறோம்—புனிதனே! என்று மக்கள் கொண்டாடுகின்றனர்.

இதே திருக்குறளையும் திருவாய்மொழியையும்—மாமேதை என்று புகழ் பெற்றுத் துலங்கும் ஆச்சாரியார் வடநாட்டிலே, (களக்காட்டூர், காட்டூர், தம்மனூர், வயலூர் போன்ற) சிற்றூர்களில் சென்று எடுத்துக்கூற இயலுமா? அங்கு உள்ள வடநாட்டு மக்கள், அவரை வாழ்த்தி வரவேற்க இசைவரா?

அங்கே இருந்துதான் அறிவு ஒளியும் அன்பு நெறி

அடுத்த கிழமை!

உழைப்பே செல்வம்

என்ற தம்பிக்கு மடல்

வெளியாகிறது.

மாமேதை மறைவை மறத்தலும் ஒல்லுமோ?

யும், அரசியல் முறையும் பொருளாதார வழி வகையும் அளித்திட இங்கு 'தலைவர்கள்' — வருகின்றனர்—இங்கிருந்து, அங்கு? ஏக்கமன்றி பிரிதென்ன பதிலுளது!

விேனாபாவைக் கண்டபோது, என் மனதில் இந்த எண்ணம் எழத்தான் செய்தது.

எந்தத் துறையிலும், வடக்கு தலைமை தாங்க, நடத்திச் செல்ல, ஆதிக்கம் செய்ய, இடமளித்தான பிறகு, டில்லியில் மதிப்புப் பெற்றாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம், ஏற்பட்டு விடத்தானே செய்யும். எனவே தான் காங்கிரஸ் தலைவர்கள், டில்லியின் தயவைப் பெறத் தவங் கிடக்கிறார்கள்.

பாரேன் ஒரு சம்பவத்தை.

தேவிகுளம் பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழருக்குத்தான் என்று, எவ்வளவு அறிவாற்றலுடன், ஆர்வத்துடன், மக்களிடம் பேசினர்—காமராஜரும் அவருடைய உதவாக்கரைகளும்!

மார்தட்டிப் பேசினார்கள், எங்களுக்கு யாரும் எடுத்துக் கூற வேண்டியதில்லை — யாமறிவோம் — எமக்குத் தெரியும் — எம்மால் ஆகும்—என்றெல்லாம் முழக்கமிட்டனர்.

தேவிகுளம், பீர்மேடு தமிழ் நாட்டுக்குத்தான் இவை கிடைத்தாக வேண்டும் — கிடைத்தே தீரும்—பெற்றே தீருவோம்—பெற்றிட எம்மால் முடியும்—எம்மால்தான் முடியும்—இதைச் சாக்காகக் கொண்டு எதிர்க் கட்சிகள் ஊளையிட வேண்டியதில்லை—என்றெல்லாம் 'கர்ஜனை' புரிந்தனர், காங்கிரஸ் மந்திரிகள்!

சட்டசபைகளிலே தீர்மானம் நிறைவேற்றினர்.

தமிழ் நாடு காங்கிரஸ் குழு தீர்மானம் நிறைவேற்றிற்று!

எல்லாவற்றினையும் வழித்தெடுத்துச் சாக்கடையில் போட்டது டில்லி!

என்ன செய்தனர்? காமராஜரும் சரி, உதவாக்கரைகளும் சரி, என்ன செய்தனர்? என்ன செய்ய முடிந்தது?

குளமாவது, மேடாவது—என்று பேசினார் காமராஜர்.

கேட்டுப் பார்த்தோம், கிடைக்கவில்லை —என்றார் நிதி அமைச்சர். மற்ற அமைச்சர்கள், இதைத்தான் சொல்வானேன் வாய்தான் வலிப்பானேன் என்று இருந்துவிட்டனர், ஏன்? டில்லியின் தயவு வேண்டும்!

நல்ல பிள்ளைகள்! நமது சொல் தட்டாதவர்கள், குட்டினாலும், கும்பிடு போடும் குணாளர்கள்,—என்று டில்லி அறிந்திட வேண்டும். அந்த நல்லெண்ணம், ஆயிரம் தேவி குளத்துக்குச் சமானம்!—என்றுதான் எண்ண முடிந்தது.

அதோ, வடக்கே பார் தம்பி! அங்கேயும் காங்கிரஸ் தலைவர்கள் இருக்கிறார்கள்—காங்கிரசைமீறியும் தலைவர்களானவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்!! என்ன சொல்லுகிறார்கள், கேட்கிறதா!

ஒரு கணம், காட்கிலின் முழக்கத்தைக் கேட்டால் கோழையும் வீரனாவான்!!

கட்சி பெரிதுதான், ஆனால் உரிமை அதனினும் பெரிது, என்கிறார்.

நேரு என் தலைவர், சரி, ஆனால் மராட்டியம் என் தாயகம்! அதற்கு நான் துரோகம் இழைக்கமாட்டேன் என்கிறார்.

கிளர்ச்சி ஓயவில்லை—அறப்போர் நடந்தவண்ணமிருக்கிறது — ஆயிரக் கணக்கிலே அணிவகுத்து நிற்கின்றனர்.

தேஷ்முக்—பம்பாய் மராட்டியருக்கு இல்லை என்றால் நான் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க முடியாது—நான் மராட்டியன்!—என்று முழக்கமிடுகிறார்.

பஞ்சாப், வங்காளம், பீகார் — எங்கும், தம்பி, உரிமை பறிபோகிறது என்று தெரிந்ததும் துடித்தெழுந்து, தடுத்து நிறுத்துவோம் என்று முழக்கமிடத் தலைவர்கள் இருக்கிறார்கள். இங்கோ, தாசர் புத்தி தலைக்கேறிவிட்ட நிலையில், குளமாவது மேடாவது, எனக்குப் பதவி போதும் என்று கூறிடத்தான் தலைவர்கள் இருக்கிறார்கள்.

அஞ்சா நெஞ்சம் கொண்டவர்கள் அங்கே!

கெஞ்சிக் கூத்தாடி பஞ்சைப் புத்தியைக் காட்டுவோர்!! இங்கே!!

பொதுவாக, தென்னாட்டில் வடநாட்டு மக்களும் வடநாட்டுத் தலைவர்களும் அடைந்துள்ள கௌரவம் வடநாட்டில் தென்னாட்டு மக்களும் தென்னாட்டுத் தலைவர்களும் அடையவில்லை. நம் நாட்டைப் பற்றியும் நமது பண்பாட்டைப் பற்றியும் வடநாட்டில் உள்ள பொதுமக்களுக்குப் பொதுவாக ஒன்றுமே தெரியவில்லை என்று சொன்னால் மிகையாகாது. அப்படி நம்மைப் பற்றித் தெரிந்து கொண்டிருப்பவர்களும் நல்ல முறையில் தெரிந்து கொண்டிருக்கவில்லை என்பதைப் பார்க்கும்போது மனத்துக்குச் சலிப்பாகத்தான் இருந்தது.

12—2—56ல் கல்கியில் காணப்படும் மணிவாசகம் தம்பி.

சலிப்பு வெறுப்பு, கசப்பு,—எல்லாம் ஒரே வழி எழுகிறது—எனினும், ஆட்டிப்படைக்கும் அதிகாரம் டில்லியில் இருக்கிறதே என்பதை எண்ணும்போது, அச்சம் பிறக்கிறது, அதனால் அடிபணிகிறார்கள்.

அவர்களுக்கு உள்ள அச்சத்தைப் போக்குவதும் நமது அருந்தொண்டிலொன்றாகத்தான் அமைய வேண்டும்.

டில்லியின் ஆதிக்கத்தை எதிர்த்து, நாம் நடாத்தும் அறிவுப் பிரசாரம், மக்களை மட்டுமல்ல மருட்சியால் கட்டுண்டு கிடக்கும், இந்தத் தலைவர்களையும், அச்சத்தைவிட்டொழிக்கச் செய்யும்.

ஏதுமில்லாதார், இவர்கட்கே டில்லி ஆதிபத்தியத்தை எதிர்த்திடும் துணிவு பிறக்கிறதே, நாம் மட்டும் ஏன் கோழைகளாய் கோடிட்ட இடத்தில் கையொப்பமிட்டுக் குற்றேவல் புரிபவராய் இருந்திடவேண்டும்—கொற்றம் நடாத்த நம்மால் ஆகாதா, என்று அவர்கள் எண்ணிடும் நிலைமை பிறந்திடவேண்டும். அந்த நன்னாளை எதிர்பார்த்தே தம்பி, நீயும் நானும் நாளெல்லாம் உழைக்கிறோம். நமது உழைப்பு வீண்போகாது! நிச்சயமாக!!

அண்ணன்,

அண்ணாதுரை

(8—7—56 திராவிட நாடு இதழில்)

வாழ்ந்தது கனவா?

வாழ்ந்தது கனவா? நீவிர்
வளர்ந்தது கனவா? நெஞ்சில்
வீழ்ந்தது கனவா? மண்ணில்
வீழ்ந்தது கனவா? வாடும்
தாழ்ந்தவர் குறையைத் தீர்க்கத்
தவித்தது கனவா? மக்கள்
சூழ்ந்திடும் சொல்லால் ஆற்றல்
சொரிந்தது கனவா அண்ணா!

எத்தனைச் சீர்தி ருத்தம்;
எத்தனைப் போர்மு ழக்கம்!
முத்தமிழ் சமுதா யத்தில்
மூண்டிடும் துயர்து டைக்க
எத்தனை நாடகங்கள்!
ஏடுகள் தொடங்கி வைத்தாய்
எத்தனைக் கதை, எழுத்து?
எத்தனை மறுமலர்ச்சி!

இனியொரு அறிஞ ரில்லை
இனியன கூறு தற்கு!
நனியுயர் அண்ண னில்லை
நாட்டினை ஈர்ப்ப தற்கு!
தனிப்புகழ் மனித ரில்லை
தமிழ்மொழி ஏற்று தற்கு!
கனிவுறும் வார்த்தை யாலே
கவர்ந்திட யாரு மில்லை!

ஆலய மணியின் ஓசை
அடங்கியே போன தம்மா!
காலையை விளைய வைத்த
கதிரவன் மறைந்த தம்மா!
சோலையாய்க் காட்சி தந்த
சரித்திரம் வீழ்ந்த தம்மா!
மேலைவான் குருதி மூச்சு
மேடைக்குள் தூங்கு தம்மா!

—செ. ஆடலரசு.

27.3.69.

ஆருயிரைத் தந்துவிடு!

எங்கள் முதல்வன் இனிமைத் தமிழண்ணன்
பொங்குங் கலைஞன் புகழ்த்தமிழன் போய்மறைந்தான்
எங்கு மறைந்திட்டான் எவ்வா றெமைமறைந்தான்
தங்கா வுலகமெனத் தானறிந்து சென்றானே?

அண்ணாவைக் காணோம் அருள்வழியும் அன்புமுகத்
தண்ணாவைக் காணோம் அறிஞரையுங் காணோமே
புண்ணாகி நெஞ்சம் புலம்பியழ விட்டெங்கள்
கண்ணாகிக் கண்ணின் கருமணியில் நின்றானே?

காலன் உனைக்கவரக் காரணந்தான் ஏதண்ணா!
வேலை முடித்தாய் வினைமுடித்தாய் நீயென்றோ
ஞாலம் அழுதிருக்க நாட்டார் மனங்கரைய
ஓலை விடுத்தான் உனையழைத்துச் சென்றிட்டான்!

காலனே எங்களுக்குக் கண்ணான அண்ணனைஎம்
காலங் கடந்ததன்பின் கைக்கொள்ள லாகாதோ?
மேலைத் தவத்துதித்த வித்தகனை உத்தமனைக்
கோலத்தை மாற்றிக் கொடுங்கொலையாய்க்
கொண்டாயே!

கொண்ட வுயிர்திருப்பி நீயே கொடுத்துவிடு
மண்டுந் தமிழ்க்கூட்டம் பாய்ந்தோடி வந்துன்னை
அண்டுமுன் அண்ணாவின் ஆருயிரைத் தந்துவிடு
வண்டமிழர் முன்னாலே வம்புக்கு நில்லாதே!

—இளங்கோவன்

மலர்வதுதான் எக்காலம்?

நெஞ்சத்தில் நெடுந்துன்பம் நீளத்தான் சென்றீரோ
செஞ்சுடராய்ச் சீர்பெற்ற செந்தமிழாய் வந்தவரே!
கொஞ்சும்தேன் தமிழுன்னால் கொழித்தின்பம்
பெறுங்காலை
வஞ்சம்தான் வைத்தானே வழியறியா வன்காலன்!

மறத்தமிழன் மணிவிளக்கே! மலைச்சாரல் குளிர்காற்றே!
அறம்காத்த பேரறிஞர்! அண்ணனெனப் போனவரே!
உரமற்றோம் உள்ளத்தில் உன்துயிலைக் காண்கையிலே
வரமற்றோம் உம்சொல்லை வாங்கிடவே காதினிலே!

குறையறியா குணக்குன்றே நிறைகுறையாநன்னெஞ்சே!
கறைபடியா உன்னடியில் உறைவதுதான் எந்நாளோ?
சிறைவைத்தே சென்றிட்டீர் சூழ்துயரில் என்கோவே
முறையாமோ உன்பிரிவு முடிவறியோம் என்கோவே!

உலகெங்கும் உனையேத்திப் புகழ்கின்ற சொற்கடலில்
பலகண்டோம் பட்டங்கள் பகலவனே பறந்திட்டீர்!
களம்நாடி வருவோர்க்கும் கனிவாடும் சொல்லாடி
வளம்கூட்டி வந்தோனே வான்நோக்கிச் சென்றீரோ?

நிலம்போற்ற நின்தொண்டை நீள்புவின் குணம்போற்ற
குலம்போற்ற உன்னரசின் குடிபோற்ற வாழ்ந்திட்டீர்!
எமன்தூக்க ஆளானீர்! எதிர்நோக்கும் வாழ்நாளில்
எமைகாக்க யாருள்ளார்? எவரெம்மைத் தேற்றிடுவார்!

கருங்குயிலும் கூவாதே! கவின்மயிலும் ஆடாதே!
மருங்கிலுமுன் உடல்காணா மாமழையும் வாராதே!
அரும்பிடுமோ மலர்க்கூட்டம்? அவைகளுக்கும்
பிரிவுதுயர்
திரும்பிடுமோ? தினம்அழுது தேம்பிடுமோ மலராமல்!

உனையீன்ற திருக்காஞ்சி உனையெண்ணி உழன்றிடுமே!
உனதில்லம் வருவோர்க்கு கண்ணீரைக் காட்டிடுமே!
துணைவந்த தமிழ்த்தாயுன் உயிர்காக்க மறந்தாளோ?
அணையில்லா அகமகிழ்வால் அணைக்கவுணர்
விழந்தாளோ?

கண்ணீரில் நீந்துமெனைக் காண்பது நீ ரெக்காலம்?
மண்மீதுன் மணங்கமழ மலர்வதுதான் எக்காலம்?
உண்ணீர்மை அறியாரும் உயர்த்தும்பே ரேற்றவரே
புண்ணியநின் பொற்பாதம் பார்ப்பதுதான் எக்காலம்?

—இலக்கியன்.

பெரிய தலைவரின் புதிய ஆசை

(எஸ். ஆர்.)

ஆவனத்துக்கு வரவேண்டும் என நினைத்துப் பேசுவது கண்களில்கூட படுவதில்லை.

யாரேனும் கவனித்துவிடப் போகிருர்கள் என அஞ்சி தெரிவித்த கருத்து ஆபத்தான விளம்பரங்களுக்கு ஆளாகிவிடுவது வாடிக்கை.

காமராசரது அரசியல் அதிருஷ்டமோ என்னவோ அவர் அடிக்கடி கூறிவரும் ஒரு கருத்து சரியான கவனிப்பைப் பெருமலேயே இருந்து வருகிறது.

சொல்லவேண்டிய நேரத்தில் தான் சொல்கிருர்; சொல்லக்கூடிய இடத்தில்தான் சொல்கிருர்.

ஆனுல் ஏனே அது செய்தி முக்கியத்துவமாவதில்லை.

அவ்வாறு ஆகாமல் இருக்கிறதே என்பதை எண்ணி அவர் ஆயாசப் படுகிருரா அல்லது ஆனந்தப்படுகிருரா என்பது வேறு விஷயம்.

ஆனுல் அவரது அந்த கருத்து முக்கியத்துவம் பெருமல்போய்விடுகிறதே என்பதுதான் நமதுவருத்தம்.

நாகர்கோவில் தேர்தல் முகாமில் குதித்த காமராசர் அங்கு நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசியதாக வந்த செய்தியினை அப்படியே கீழே தருகிருேம்.

(நமது தனி நிருபர்)

புதுச்சேரி மார்ச் 5–குமரி முதல் இமயம் வரை நாட்டு மக்களின் வாழ்க்கையை அலைக்கழிக்கும் தீயசக்திகள் தலைதூக்கியிருக்கின்றன. இந்தத் தீய சக்திகளை ஒழிக்க புதிய இயக்கம் துவக்கவேண்டும். இன்றேல் நாட்டின் எதிர்காலம் இத்தீயசக்திகளால் இருண்டுவிடும் என்று தலைவர் காமராஜ் அறைகூவல் விடுத்தார்.

இந்த இயக்கத்திற்கு எல்லா மக்களும் ஆதரவு தருவார்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு தலைவர் காமராஜ் கூறினர்.

எந்த ஒரு செய்தி நிறுவனமும் தந்த தகவல்கூட இல்லை, 'நவசக்தி' நாளிதழின் தனி நிருபர் தந்துள்ள தகவல் இது கடந்த 6–ம் தேதி பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கிறது.

சூடு பறக்க புதிய கருத்துக்களைக் காமராசர் சொல்கிருர் பாருங்கள் என்று அவரது பேச்சுக்கு வண்ணம் போடும்போது விளைந்த தவரு அல்லது காமராசர் இதனைப் பேச வேண்டுமென்று விரும்பியே இப்படிப் பேசினுரா என்றெல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கத்தேவையில்லை.

பொறுப்புள்ள தலைவர் பேசியதாக —அதுவும் தக்க ஒரு நேரத்தில் தெரிவித்திருப்பதாக கட்சியின் பொறுப்புள்ள பத்திரிகையில் வந்திருப்பதால் அப்படியே ஏற்றுக் கொள்ளலாம்.

மனைவி 'பாம்பு வந்துவிட்டதென்று' அலறித்துடிக்க அதைப் பார்த்து பதை பதைத்த வீட்டுக்காரன் வெளியே வந்து அடிக்க ஆண்பிள்ளை யாராவது வாருங்கள் என்று அறை கூவி அழைத்தானும்.

அந்தக் கதையாக காங்கிரஸ் என்னும் முகவிலாசத்தில் முக்கிய பங்கினை வகித்துக் கொண்டு

புதிய இயக்கம் காண வாரீர்!

என்று வேண்டுகோள் விடுக்கிருர் பெருந்தலைவர்

கணவன் வெளியே சென்று பாம்பினை அடிக்க ஆள் யாராவதுவாருங்கள் என அழைத்தது அவனது வீரத்தினை மட்டும் சந்தேகிப்பதாகாது; அது மனைவிக்கும் நேர்ந்த ஒரு அவமானம்தான் பாம்பினை அடிக்க வேறு ஆள் துணை நாடுபவரை துணைவராகக் கொண்டோமே என அவளும் வெட்கப்பட்டாக வேண்டும்.

அதுபோல காங்கிரசின் போர்வையில் இழையும் நாலுமாக இருக்கும் காமராசர் தீமைகளை அகற்றப் புதுக்கட்சிகாணவேண்டும்அதற்கு; மக்களே நீங்கள் ஆதரவு காட்ட வேண்டும் என பேசியிருப்பது—

—அவரது தகுதிக்கு மட்டுமல்ல—அவர் சார்ந்திருக்கும்—அவரைச் சார்ந்திருக்கும் கட்சிக்கே ஏற்பட்ட மாபெரும் களங்கமாகும்.

* இரு முறை முதலமைச்சராக இருந்தவர்
* கட்சிக்காகத் தனது பெயராலேயே திட்டமொன்றைத் தந்தவர்
* இரு முக்கியக் கட்டங்களில் நாட்டின் பிரதமரையே தனது தனிச் செல்வாக்கினுல் தேர்ந்தெடுத்தவர்
* தேர்தல் களங்களில் கட்சிக்காக வெற்றிபல குவித்தவர்
* கட்சியின் அனைத்திந்தியத் தலைமையையும் வகித்தவர்
* கடைசியாக கட்சிப் பெருமைக்காகத் தனது பெயரையும் பணயம் வைத்து "நெருக்கடி" யான நாகர் கோவில் தேர்லிதல் குதித்து வெற்றி கண்டவர்.

—இப்படி பல சிறப்புப் பட்டயங்களை நிரந்தரமாகத் தனக்கும் காங்கிரசுக்கும் தேடிக்கொண்டிருக்கும் காமராசர்,

புதிய இயக்கம் கண்டாக வேண்டும்

என பேசியிருப்பது–

அப்படியானுல் காங்கிரஸ்?

அதில் இவரது ஈடுபாடு?

என்ற இரண்டு கேள்விகளுக்கு இடமளிப்பதாக அமைகிறது.

நாட்டில் தீய சக்திகள் தலைதூக்கியுள்ளன. அதை அகற்ற காங்கிரஸ் இன்னும் தீவிரமாகப் பாடுபட இருக்கிறது; எனவே ஒத்துழைப்பு தாருங்கள் என்று பேசி இருக்க வேண்டிய பெருந்தலைவர்—

புதிய இயக்கம் கண்டாகவேண்டும். என்றும் அதற்கு மக்கள் ஆதரவு வேண்டுமென்றும் பேசியிருப்பதைத் தவருகப்பேசி விட்டதாகவோ தவ

[15-ம் பக்கம் பார்க்க]

இருதயத்தில் ஓர் ரோஜா

முல்லை சக்தி....

[4]

மாலை மந்தகாசம் புரிந்து கொண்டிருந்தது! சென்னைத் தெருக்களில் பெண்களின் பட்டாளம் பட்டாம் பூச்சிகளைப்போல் பறந்து கொண்டிருந்தது உலகமே உல்லாசத்தில் மிதந்து கொண்டிருப்பதாகத் தெரியும், சென்னை சிங்காரிகளின் சிரிப்பையும் ஆட்டத்தையும்காணும் போது! 'வேலையற்றதுகளும்' 'கவலையற்றதுகளும்' அவர்களின் பின்னலை — மின்னல் இடையை — கன்னல் மொழியை—ரசித்துக்கொண்டிருப்பர். அவர்களின் சிரிப்புக்குச் சதிராடுவோரும், புன்னகைக்குத் தாளம் போடுவோரும், கடைக்கண் பார்வைக்குக் கைக்கட்டிச் சேவகம் செய்வோரும் ஏராளம்! இளைஞர்களின் இந்த பலவீனத்தை நன்கு உணர்ந்த மங்கையர். இளம் நெஞ்சங்களைத் தங்களது மையல் விழி வலையில் விழிவைத்து பம்பரம்போல் சுழலவைத்து வேடிக்கைப் பார்ப்பர்! இத்தகையவர்களில் ஒருவனுகத்தான் ராஜு இத்தனை நாட்கள் வாழ்ந்து வந்தான்! தட்டிக் கேட்க யாருமில்லை; வற்ருதஜீவநதிபோன்ற செல்வச் சுரங்கம், அழகிய பங்களா, வசதியான வாழ்க்கை. இத்தனையும் இருந்தால் இந்தக் காலத்தில் சென்னையில் ஒருவன் நல்லவனுக வாழமுடியுமா? வாழத்தான் விடுமா சமுதாயம்?

ஒரு மனிதன் கெட்டு விட்டான் என்று சமுதாயம் குற்றம் சாட்டுகிறதே—அந்த மனிதன் கெட்டுப் போவதற்கு அவன் மட்டும்தான் காரணமா? துருவி ஆராய்ந்துப் பார்த்தால் இந்த சமுதாயமும்—சமுதாயத்தின் அடிப்படையும் தான் காரணமாக இருக்கும்! ஒரு மனிதன் கெட்டுப் போவதற்கான அத்தனைப் பொருள்களையும், சந்தைக் கடையிலே விரிப்பதைப்போல கண்ணெதிரே விரித்து வைத்துவிட்டு, அவைகளைத் தொட்டால் பாவம்; தீண்டிஞல் திரு நீலகண்டம் என்ருல் அதற்கு என்ன பொருள்! குன்று போல் அன்னத்தை பசிக்காரன் முன்னே குவித்து வைத்துவிட்டுப் 'புசிக்காதே' என்று கட்டளை இட்டால் அவன் அதனை எவவளவு நேரம் தொடாமலிருப்பான். வயிற்றில் புரட்சி ஏற்பட ஏற்பட அவன் புரட்சிவாதியாக மாறி விடுவானல்லவா? அதைப்போலதான் கவர்ச்சிகளும்—உடலையும் உள்ளத்தையும் கிளர்ச்சி செய்பவைகளும் இளைஞர்களின் கண்முன்ஞலே—அவர்களின் கைகளுக்கு எட்டக்கூடிய தூரத்தில் இருக்கும்போது—அலைபாயும் மனத்தினர்—இந்த வலையில் விழுவதில் ஆச்சரியமென்ன! எல்லோரும் விவேகானந்தர்களாக இருக்க முடியாதே! மேனகையின் மோகன ஆட்டத்தில், விசுவாமித்திரரே விழுந்தபோது, மானிட ஜென்மங்கள் எம்மாத்திரம்! ஆக ஒருவன் கெட்டுவிடுகிருன் என்பதற்கு அவன் மட்டும் காரணமல்ல! அவனது சுற்றுச்சார்பு—சூழ்நிலை — சமுதாயம்—சமுதாயத்தை உருவாக்கும் அரசாங்கம் எல்லாமே காரணமாகின்றன! அதுபோல்தான் ராஜுவும் கெட்டுப் போஞன்!

அவனது தந்தை பிரபல தொழில் அதிபராக வாழ்ந்து வந்தார்! அவருக்கு எத்தனையோ தொழில் ஒப்பந்தங்கள் நடைபெற வேண்டி இருந்தது! அதற்காக அடிக்கடி அவரது இல்லத்திலே விருந்துகள் நடைபெறும்! விருந்து — வெறும் உணவு வகையோடு நின்றுவிடவில்லை. விதவிதமான மதுக்கோப்பைகள் நிரம்பி வழிந்தன! இதனைப் பார்த்துப் பார்த்து ராஜுவுக்கும் மதுவை ருசித்துப் பார்த்தால் என்ன என்ற சபலம் ஏற்பட்டது! ஒரு நாள் ருசித்துப் பார்த்தான்......மறுநாள் ஒரு கோப்பை மதுவை அருந்திஞன். நாளடைவில் புட்டிகளையே உருட்ட ஆரம்பித்தான்! திடீரென்று அவனது தந்தையும் ஏராளமான செல்வத்தை மட்டும் அவனுக்குத் துணையாக வைத்துவிட்டுப் போய் விட்டார்!

அவனும் கடிவாளமில்லாத குதிரையாஞன்! பலாப்பழத்தை மொய்க்கும் ஈக்களைப்போல் நண்பர்கள் அவனை மொய்த்துக்கொண்டார்கள்! கேளிக்கை — விருந்து — ஆட்டம்—பாட்டம் எல்லாமே அவனது நித்தியப் பணிகளாயின! மதுவுக்கும், மங்கைக்கும் அடிமையாகி விட்ட அவனை, ஆனந்த்தான் திருத்த முயன்ருன். ஆஞல்...... தோல்வியே அவனுக்குப் பரிசாகக் கிடைத்துக் கொண்டிருந்தது! இறுதியில் கல்லூரியில் நடந்த சம்பவம். ஆனந்த் தந்த விலை — ராஜுவின் மாயத் திரையைக் கிழித்தது! கண்களைத் திறந்தது!

மாலை வந்ததும், மதுக்கோப்பையையும், மாது சிரோன்மணிகளின் மடியையும் தேடி அலையும் அவன் இன்று...நண்பனுக்கு அளித்த வாக்

(15-ம் பக்கம் பார்க்க)

நான் திருந்த மாட்டேன்

ஸ்ரீரங்கம் நரசிம்மன்

"சந்திரா! அடுத்த வாரம் எங்க அம்மாவை உங்க வீட்டுக்கு அனுப்பலாம்னு இருக்கேன்........" என்றான் ரத்னம்.

"எங்க வீட்டுக்கா?" அழகான விழிகளை அகலத் திறந்தாள்.

"ம்..."

"உங்க அம்மாவையா?

"ம்..."

'எதுக்கு?"

"வேற எதுக்கு?........அதுக்குத் தான்!" என்று கண்ணைச் சிமிட்டினான் ரத்னம்.

"அதுக்குத்தான்னா..." புரியாத வகையில் அவனைப் பார்த்தாள்.

"பொண்ணு கேக்க!"

"பொண்ணா?...எந்தப்பொண்ணு......?"

"உங்க வீட்டிலே எத்தனைப் பொண்ணு இருக்கு?" எல்லாம் உன்னைத்தான்!"

"என்னையா? எதுக்கு?"

"கட்டிக்க!"

"யாரு கட்டிக்க?"

"எங்க தாத்தாவோட அப்பாரு! கேள்வியைப் பாரு...யாரு கட்டிக்கவாம்!......எல்லாம் நான் கட்டிக்கத்தான்!..." என்று ஒரு ராஜ பார்வை பார்த்தான் ரத்னம்.

"ஆசையைப் பாரு!......" என்று நாணத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள் சந்திரா.

"ஆசையாப் பாருங்கறியா?"

"ம்......பார்ப்பீங்க!"

"பார்ப்பேன்தான்!"

"ஏனும்?"

"மனசுலே ஆசை இருக்கு. பார்க்கறேன்."

"ஆசை இருந்தா போதுமா?"

"கையிலே நாலு காசும் இருக்கு!"

"ஆசையும் காசும் இருந்தா போதுமா?"

"இன்னும் என்ன வேணுமாம்!"

"எனக்குப் பிடிக்காத சில பழக்கங்களெல்லாம் உங்களிடம் இருக்கே!......"

"உனக்குப் பிடிக்காதுன்னு தெரிஞ்சா அப்புறம் அந்தப் பழக்கத்தை வச்சுப்பேனா?......சொல்லு; உனக்கு எது பிடிக்கல்லே?"

"எவ்வளவோ இருக்கு!......இப்ப பீடி குடிக்கறிங்களே, இது கூட எனக்குப் பிடிக்கல்லே..." என்றாள்.

"இவ்வளவுதானே?...... இப்பவே இதை விட்டுடறேன்!......" என்று கூறியவாறு பிடித்துக்கொண்டிருந்த பீடியை வேகமாக நாலு இழுப்பு இழுத்து விட்டு வீசி எறிந்தான். பிறகு சந்திராவைப் பார்த்து "போதுமா?......" என்றான்.

"போதாது; இப்ப வீசி எறிஞ்சுட்டீங்க...அப்புறம் நான் பார்க்காம பிடிக்க மாட்டீங்கன்னு என்ன நிச்சயம்? ஒரு வாரம் கழிச்சு வந்து நிசம்மாவே இந்தப் பழக்கத்தை விட்டுட்டீங்களான்னு சொல்லுங்க......" என்றாள்.

"சரி; இன்னும் என்ன பிடிக்காத விஷயங்கள்? அதையும் சொல்லு..." என்றான் ரத்னம்.

"முதல்லே இந்தப் பழக்கத்தை விடுங்க. அப்புறம் சொல்றேன்..." என்றாள்.

"ஒரு வாரம் கழிச்சு உன்னை வந்து பார்க்கிறேன்..." என்று கூறிவிட்டுப் போனான் ரத்னம். அரை மணி நேரம் கழித்து ஒரு பீடியை எடுத்துப் பற்றவைக்கப் போனவனுக்குச் சட்டென்று சந்திராவிடம் கூறியது நினைவுக்கு வந்தது. மடியிலிருந்த பீடிகளையெல்லாம் எடுத்து வீசி எறிந்தான். எறிந்து விட்டானே தவிர, நேரம் செல்லச் செல்ல பீடி இல்லாதது ரொம்பவும் கஷ்டமாயிருந்தது. 'பீடி தானே குடிக்கக் கூடாது?.........சிகரெட் ஒன்று புகைத்தால் என்ன?' என்று தோன்றியது. ஒன்று வாங்கி புகைக்கலாமா வென்று சபலமும் தோன்றியது. ஆனால் மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை 'சந்திரா! உனனை ஏமாற்றமாட்டேன்!' என்று முணு முணுத்தான். அன்று இரவு முழுவதும் புகைக்காமல் மிகவும் கஷ்டப் பட்டுவிட்டான்.

மறுநாள் அவ்வளவு கஷ்டம் தெரியவில்லை. அதற்கடுத்த நாள் அந்த நினைவே எழவில்லை. மூன்றும் நாளிலிருந்து அடியோடு அந்தப் பழக்கத்தை மறந்துவிட்டான்!

ஒரு வாரம் கழித்து சந்திராவை மீண்டும் சந்தித்தான்.

"சந்திரா! நீ நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும் சரி; நான் புகைப்பதே இல்லை!" என்றான் ரத்னம்.

"நான் நம்பறேன்!" என்று தன் அழகிய பற்களைக் காட்டினாள்.

"எப்படி?"

"உங்க உதடுகள் சொல்லுகிறது! முன்னைப் போல அவ்வளவு கருப்பு இல்லை!" என்றாள்.

"நாளைக்கே எங்க அம்மாவை அனுப்பட்டுமா?"

"நீங்க விடவேண்டியவை இன்னும் பாக்கியிருக்ககே?..." என்றாள் சந்திரா.

"பீடி குடிப்பதையேவிட்டு விட்டேனே! உனக்காக எதைச் செய்ய மாட்டேன் சந்திரா? சொல்லு என்றான் ரத்னம்.

"தினமும் ரம்மி ஆடறீங்கன்னு எங்கப்பா சொல்லிக்கிட்டிருந்தாரு... நிசந்தானா?..."

ரத்னம் ஒரு நிமிஷம் மவுனமாயிருந்தான். பிறகு தயங்கியவாறே ஆடறதுதான்!...என்று இழுத்தான்.

"ஒரு சூதாடிக்குப் பெண் கொடுக்க எங்கப்பா விரும்பமாட்டாரே!..."

"இவ்வளவுதானே? இனிமே சீட்டுக் கட்டைக் கையால் கூடத் தொடமாட்டேன்!" என்றான்.

"எதையும் செய்து காட்டணும்!"

"அப்படின்னா?"

"ஒரு பதினைந்து நாள் உங்களால் ரம்மி ஆடாமல் இருக்க முடிகிறதாவென்று பாருங்க...நிச்சயமா அந்தப் பழக்கத்தை விட்டிருந்தா, அப்புறம் பேசுவோம்!" என்றாள்.

சந்திராவுக்காக எதையும் எளிதில் செய்துவிடலாம் என்று நினைத்த ரத்னத்திற்கு ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரம் வந்ததும் ரம்மி ஆடப் போகாமல் இருந்தது. ஒவ்

வொரு பொன்னன நிமிஷத்தையும் வீணாக்குவதைப் போலிருந்தது. கட்டைக் கலைத்துப்போட அவன் கைகள் துடித்தன. அவனைச் செல்லாவிட்டாலும் அவனுடைய சகாக்கள் ஒருவர் மாற்றி ஒருவராக அவனை அழைத்துச் செல்ல வந்து கூப்பிட்டுக்கொண்டேயிருந்தனர். ஏதோ வேலை இருக்கிறது, எங்கோ செல்லவேண்டும் என்றவாறு ஏதேதோ காரணங்கள் கூறி தட்டிக் கழித்தான். உள்ளூரில் இருந்தால் நண்பர்களின் தொந்தரவு பொறுக்க முடியாது போலிருக்கவே ஒரு வாரத்திற்கு எங்கோ வெளியூர் போய் வந்தான்.

சந்திரா கொடுத்த கெடுவின்படி பதினைந்து தினங்கள் கழித்து ஒரு வெற்றி வீரனைப்போல அவள் முன்பு போய் நின்றான் ரத்னம்.

"ரம்மி ஆடும் இடத்தில் உங்கள் முகம் தென்படுவதில்லை ! 'யென்று அப்பாவிடம் யாரோ சொன்னார்களாம்...'' என்றாள்.

''எப்படித் தென்படும்? நான்தான் அதை அடியோடு மறந்துட்டேனே!''

''நல்லது!''

''இன்னும் விடவேண்டியது ஏதாவது பாக்கி யிருக்கா?'' என்றான்.

''உங்கள் நண்பர்களைப் பற்றித்தான் கவலையாயிருக்கு...'' என்றாள்.

''கவலை வேண்டாம். அவர்கள் என்னை விட்டு விடுவார்கள்!''

''ஏன்?''

''நான்தான் ரம்மி ஆடுவதில்லையே! இனிமேலும் என் சினேகிதத்தை வைத்துக் கொள்வார்களா? ......சினேகிதத்திற்கே நான் தகுதியில்லை யென்று என்னை ஒதுக்கி விடுவார்கள்!''

''ஒதுக்கிட்டுப் போகட்டுமே! அதனாலே குறைஞ்சா போய்டுவீங்க?...''

''உனக்காக இந்த உலகமே என்னை ஒதுக்கினாலும் நான் வருத்தப்பட மாட்டேன சந்திரா!''

''மெய்யாவா?''

''பின்னே பொய்யா?''

சந்திரா சிறிதுநேரம் பேசாமலிருந்தாள். பிறகு ''இன்னும் ஒரே ஒரு காரியம் நீங்க செய்யணும்...'' என்றாள். 'இன்னுமா சோதனை' என்கிற பாவனையில் அவளைப் பார்த்தான் ரத்னம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

12-ம் பக்கத் தொடர்ச்சி

ருக பிரசுரித்துவிட்டதாகவே கொண்டுவிட முடியாது.

கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ''கவனத்தில் பட வேண்டும்'' என்று பேசுவது கண்களில்கூட படுவதில்லை. கவனிக்க மாட்டார்கள் என்று பேசிவிடுவது பிரச்சனையாக மாறிவிடும்'' என்ற ஒரு போக்குக்கு ஒத்ததாகத்தான் இருக்கிறது.

காங்கிரசுக்காக நடைபெறும் தேர்தல் பிரச்சார மேடைமீதிருந்தே காமராசர் புதிய இயக்கம் கண்டாக வேண்டும் என்று பேசியிருக்கிறாரென்றால் அவரது கருத்தினை அரசியலுக்கு அப்பாற்பட்ட தத்துவவிளக்கமென்று தள்ளி வைப்பது பேதமையாகத்தான் இருக்கும்.

எனவே அவரைப் பொறுத்தமட்டில், ஏனோதானோ' எனத் தெரிவித்த கருத்தல்ல இது. ஆழ்ந்த நோக்கத்துடனேயே பேசியிருக்கிறார். இல்லையென்றால் மக்கள் ஆதரவினையும் உடன் கோரியிருக்க மாட்டார்.

* தீய சக்திகளை அகற்ற காங்கிரஸ் திறமையற்றுப் போய் விட்டது
* காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சியாக இருந்து சமுதாய நன்மைகளை ஆற்ற முடியாத ஒன்றாகி விட்டது
* காங்கிரஸ் காலத்துக்கும் உபயோகத்துக்கும் ஒத்துவராததாகி விட்டது

—இத்தனையையும் உணர்த்தும் வகையில் தான் காமராசர்

புதிய இயக்கம் தேவை

என்று மொத்தமாகப் பேசியிருக்கிறார்.

தனிப்பட்ட ஒரு துணைப் பிரதமரை—அவரது நடப்புகளை விமர்சித்தார் என்பதற்காவே சந்திரசேகர் என்ற தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினரை காங்கிரஸ் குற்றவாளிக் கூண்டிலேற்றி அதனை ஒரு முக்கியப் பிரச்சனையாகவே நாட்டில் உலவவிட்டது ஒரு சில நாட்கள்,

ஆனால் காமராசரோ கட்சியையே வேருடன் சாய்க்கிறார்.

தலைமைப்பீடம் என்ன பதில் சொல்கிறது?

13-ம் பக்கம் தொடர்ச்சி

குறுதியை மீற இயலாமல் தவித்துக் கொண்டிருந்தான்!

ஒருபக்கம் மதுவின் நெடிய வாசனையும், மங்கையரின் புன்னகை வதனமும் அவனை இழுத்தன! மறுபுறம் ஆனந்த்! எப்பக்கம் போவது என்று அவனது மனம் ஊஞ்சல் ஆடிக்கொண்டிருந்தது! இறுதியில் ஆனந்தே வெற்றிபெற்றான்!

ஆனந்திற்கு அளித்த வாக்குறுதியை இனி மீறுவதே இல்லை என்ற திட சித்தத்துடன் அவன் வெளியே கிளம்பினான்!

அவன் புறப்படும்போது வேலைக்கார வேலையன் 'ஐயா! சீக்கிரம் வந்துடறீங்களா? எனக்கு உடம்பு சரியில்லை 'என்றான்! தினசரி இரவு இரண்டுமணி வரை கண் விழித்துத் தனது எஜமானனுக்குக் கதவைத் திறந்துவிடுபவன் வேலய்யா! இன்று அவனைப் பார்க்க ராஜுவுக்குப் பரிதாபமாக இருந்தது!

'சீக்கிரமா வந்துடறேன்' என்று கூறிவிட்டு ராஜு புறப்பட்டான்!

அவன் எங்கு சென்றாலும் அங்கு நடைபெற்ற அத்தனை நிகழ்ச்சிகளும் அவனது பழைய வாழ்க்கைக்கே அவனை அழைத்தன!

மெரினா கடற்கரையில் திரிந்த மேனாமினுக்கிகள், படக்காட்சிச் சாலையில்—படத்தில் மட்டுமல்ல—பக்கத்தில் அமர்ந்திருந்தோர் நடத்திய லீலைகள்—எல்லாமே அவனது உணர்ச்சிகளைத் தூண்டி, மீண்டும் அவனது பழைய வாழ்க்கைக்கே அழைத்தன! அவனது சபதத்துக்கு அறைகூவல் விட்டன!

உலகமே உணர்ச்சிகளின் கோளம்தானா? மனித உடலின் பலவீனத்தைத் தூண்டுவது ஒன்றுதான் இந்த உலகின் உல்லாசப் பொழுதுபோக்கா...சேச்சே....என்று எண்ணியவாறு—வீடு திரும்பினான். அவனுக்கே ஆச்சரியம் எப்படி தன்னால்இந்தளவும் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ள முடிந்ததென்று!

வழக்கமாகக் கார் ஹாரன் சப்தம் கேட்டவுடன் வேலய்யா வந்து கதவு திறப்பான். ஆனால் இன்று கதவு திறக்கப்படவில்லை. வேலய்யாவுக்கு உடல் நலம் சரியில்லையோ என்று எண்ணியவாறு கதவைத் தட்டினான்!

கதவு திறந்தது! அங்கே விளக்கு மழையில் நனைந்துகொண்டு நின்றிருந்த நங்கையைக் கண்டு ராஜு திடுக்கிட்டான்; ஆச்சரியப்பட்டான்; அச்சப்பட்டான்!

[வளரும்]

"உங்களுக்கு ஒரு வேலை தேடிக் கொள்ளணும்..." என்ருள்.

"வேலையா?......எனக்கு எதுக்கு சந்திரா வேலை? மூன்று வீட்டு வாடகை முன்னூறு ரூபா வறது... ஊர்லே வயக்காடும் தோப்பும் இருக்கு...?"

"என்ன இருந்தாளும் 'வேலை' என்று ஒன்று இருந்தால்தானே... உக்காந்து தின்ன எல்லாம் சீக்கிரம் கரைந்து போய்டாதா?..." என்ருள்.

"சரி; முயற்சி பண்ணிப் பார்க்கறேன். எனக்கு என்ன வேலை கெடைக்கும் சந்திரா? ... எட்டாவது வரை தானே படிச்சிருக்கேன்!"

"உங்களைக் கலெக்டர் வேலையா பார்க்கணுங்கறேன்? ஏதோ ஒரு வேலை. இருபது ரூபாய் சம்பளம் வந்தாலும் சரி." என்ருள் சந்திரா.

"கிடைக்கணுமே," என்று தயங்கினுன் ரத்னம்.

"முயற்சி பண்ணிப் பாருங்க...கெடைக்காமலா போகும்?"என்று உற்சாகப்படுத்தினுள். அன்று முதலே வேலை தேடி அலைவதில் முனைந்தான் ரத்னம். தனக்குத் தெரிந்த பெரிய மனிதர்களிடமெல்லாம் வேலை செய்து வைக்குமாறு கேட்டுக் கொண்டான்.

அவனுடைய அதிருஷ்டம், ஒரு வாரத்திற்குள் அவனுக்கு வேலை கிடைத்துவிட்டது; மிருகக் காட்சி சாலையில் அறுபது ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது. ஒபபுக் கொண்டு ஒழுங்காகப் போய்க் கொண்டிருந்தான்.

வேலை ஒப்புக்கொண்டதிலிருந்து இரண்டு மாத காலத்திற்கு அவனுல் சந்திராவைச் சந்திக்க முடியவில்லை. நேரமில்லாததுதான் காரணம்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் சந்திராவைப் பார்த்தான்.

"என்னை மறந்துட்டீங்க போலிருக்கு......என்ருள் சந்திரா.

"இல்லை, சந்திரா. அதிகாலையிலேயே எழுந்து வேலைக்குப்போய் விடுகிறேன்......வீடு திரும்ப இரவு எட்டு மணியாகி விடுகிறது........" என்ருன்.

"வேலை தேடிக்கிட்டீங்கன்னு கேள்விப்பட்டேன்..." என்ருள்.

"மிருகக் காட்சி சாலையில்...... அறுபது ரூபாய் சம்பளம்..."

"அப்படியா......? அப்பாகிட்டே

சொல்லி நாளைக்கு உங்களுக்கு விருந்து கொடுக்கச் சொல்லப் போறேன்......" என்ருள் சந்திரா உற்சாகமாக.

"வைக்கச்சொல்லு; ஒரு வெட்டு வெட்றேன்..." என்ருன் ரத்தினம்.

"உங்களுக்கு என்ன பிடிக்கும்? ஆடா கோழியா?"

"ஐயயோ! அதல்லாம் மூச்சு விடப்படாது! நான் வீரசைவம்!' என்ருன் ரத்னம்.

"சைவமா? அது எத்தனை நாளா?......"

வேலைக்குப் போக ஆரம்பிச்சுக் கொஞ்ச நாளா...மிருகங்களோடும் பட்சிங்களோடும் பழக ஆரம்பிச்சதும் அவைகளைக் கொல்றது தப்புன்னு தோணித்து........சைவமா மாறிட்டேன்!..."

"நான் அசைவமாச்சே..."

"நீயும் சைவமா மாறிடு...உனக்காக நான் இவ்வளவு செய்திருக்கையில்..."

"முடியாதுங்க......நான் சைவமா மாற முடியாது. அதனுலே நம்ம குடும்ப கவுரவமே போய்டும்........ வேண்டியவங்க சொந்தகாரங்க வந்தா வெறும் மரக்கறி உணவா போடுவது? ...தயவு செஞ்சு நீங்க அதை வாபஸ் வாங்கிக்குங்க..." என்று வேண்டினுள்.

"எதை?"

"சைவமா மாறியதை!..."

"சந்திரா! உனக்காக எவ்வளவோ கெட்டப் பழக்கங்களை விட்டேன். ஆனு யாருக்காகவும் ஒரு நல்ல பழக்கத்தை விடமாட்டேன்" என்ருன் ரத்னம். அவன் குரலில் உறுதி தொனித்தது.

"அப்போ உங்களுக்கும் எனக்கும் எப்படிச் சரிப்பட்டு வரும்? நீங்க சைவ குடும்பத்திலே பெண் தேட வேண்டியதுதான்!" என்ருள் சந்திரா.

"நல்லது!" என்ருன் ரத்னம்.

"வருத்தமா?"

"இல்லை சந்திரா!" என்ற ரத்னத்தின் உதடுகள் "சிலரால் பிறரைத் தான் திருத்த முடியும்!" என்று முணுமுணுத்தன.

★

...சிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-...
...6, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.